● தமிழ் ஈழத் தீர்மானத்துக்காதரவாக

# லண்டனில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

சுதந்திரன்
SUTANTIRAN

விலை: சதம் 60. தொலைபேசி: 23411 நிறுவியது: 1947.

வள்ளுவர் ஆண்டு 2006 மார்கழி 27, முஹர்ரம் 8 (11-1-76) ஞாயிறு புத்தகம் 29, இதழ் 25

## அப்துல் மஜீத்துக்கும் இப்போது புரிகிறது!

"கலலோயா பள்ளத்தாக்கு அபிவிருத்தி என்ற போர்வையில் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடமளிக்காதவகையில அப பாறைப்பகுதி சிங்களமயமாக்கப்பட்டதனல் சிறுபான்மையினர் தங்களது வயற்காணிகளைவிட்டு விரட்டப்பட்டனர். முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்குப் சொந்தமான 60 வீதமான ஏக்கர் நிலங்கள் கலலோயா பள்ளத்தாக்கு சபையினல் சுவிகரிக்கப்பட்டு அங்கு சிங்களவர்களும் முஸ்லிம்களும் வாழ்ந்த சில குடியேற்றத் திட்டங்கள்கூட நாளடைவில் உருமாறி சிங்களக் குடியேற்றத் திட்டங்களாயின"

— தொகுதி நிர்ணயக் குழுவின் முன் பொத்துவில் பா. உ. ஜனுப் அப்துல் மஜீத் அளித்த சாட்சியத்தில் கூறியது. (தினகரன 8-1-76)

### சனவரி 31ம் நாள் ஈழ விடுதலை முன்னணி நடத்துகிறது!

பெப்ரவரி 4ம் நாள் இலங்கைத்தேசிய அரசுப்பேரவையில் முன் வைக்கப்படும் தமிழ் ஈழத் தீர்மானத்துக்கு ஆதரவாக இலண்டன் மாநகரில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை இலண்டனிலுள்ள ஈழவிடுதலை முன்னணியினர் சனவரி 31ம் நாள் நடத்தவிருக்கின்றனர். இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் முடிவில் தமிழர்களுக்குச் சொந்தமான தமிழ் ஈழத்தை பிரித்துக்கொடுக்கும்படி சிறீலங்காப் பிரதமருக்கு வேண்டுகோள் விடுக்கும்படி கோரும் மகஜரொன்றை காமன்வெல்த் நாடுகளின் தலைவர் என்ற முறையில பிரிட்டிஷ் பிரதமரிடம் அவர்கள் சமர்ப்பிப்பார்கள்!

இது சம்பந்தமாக ஈழ விடுதலை முன்னணி பின் வரும் அறிக்கையை விடுத்துள்ளது.

"பல நூற்றூண்டுகளாக வீரத்தமிழ் அரசர்களால் அருளோடும் புகழோடும் ஆளப்பட்டு வந்த நம் தமிழ் ஈழத்தில் இன்று சிங்களவன் என்னும் அன்னியன் வாலாட்டுகிருன். அவனது வாலை ஒட்ட நறுக்கி எமது சொந்தமான தமிழ் ஈழத்தை பாழ் நெருப்பெனும் சிறீலங்காவின் பெரும்பான்மைச் சிறைக்கூடத்திலிருந்து பிரித்தெடுக்கும் முயற்சியில் தன்மானமுள்ள தமிழர்கள் ஒவ்வொருவரும துடித்துக் கொண்டிருக்கிருர்கள். அவர்களது துடிப்பினது எதிரொலியின் ஒருபடி 1976ம் ஆண்டு பெப்ரவரி 4ம் திகதி தமிழர் கூட்டணியால் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படும் தனிநாட்டுப் பிரேரணை மூலம் ஒலிக்கப்போகின்றது.

செவிகளே இல்லாத சுவர்களைப்போன்ற சிங்கள ஏகாதிபத்திடத்தின் வாக்குப் பலத்தினல் இந்தப் பிரேரணை தோல்வியையே தழுவும் என்ருலும், ஜனநாயக முறையிலும் மக்கள் சுதந்திரத்திலும், சிறுபான்மை இனங்களின் நலனிலும் அக்கறை கொண்ட உலக மக்கள் மத்தியிலே — சிறிலங்காவில் நடைபெறும் நிகழ்ச்சிகளை எடுத்துவைக்கும் பெரும்பணியை ஈழவிடுதலை முன்னணியினர் எடுத்துள்ளனர்.

பலவழிகளிலும் இந்தப் பணியைத் தொடர்வதற்கு திட்டமிட்டுள்ள ஈழ விடுதலை முன்னணியினர், திட்டத்தின் முதற் படியாக எதிர்வரும் சனவரி மாதம் 31ம் திகதி ஓர் மாபெரும் எதிர்ப்பு ஊர்வலத்தை இலண்டனில்

—5-ம் பக்கப் பார்க்க

## தமிழ் ஈழத்தில் முஸ்லிம்களுக்கு சமவுரிமை!

"தமிழரசுக் கட்சியும் தமிழர் கூட்டணியும் தமிழருக்குள்ளே எந்த வித்தியாசமும் இல்லாமல் சரிநிகர் சமத்துவமான சமய சார்பற்றசோசலிச அரசை உருவாக்கத் திட்டமிட்டிருக்கிருர்கள். தமிழரசுக் கட்சியின் கொடியிலுள்ள மஞ்சள் சிகப்புப் பச்சை ஆகிய மூன்று நிறங்களும் இலட்சியம் தியாகம் சுபீட்சம் ஆகியவற்றைக் குறிப்பதுபோல தமிழர்களாகிய இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மக்களின் சரிநிகர் சமத்துவத்தையும் ஒற்றுமையான ஒரு போக்கையும் எடுத்துக் காட்டுகின்றன.

"சமய சார்பற்ற அரசு என்று சொல்லும்பொழுது சமயமில்லாத சமுதாயம் என்ற அர்த்தமல்ல. கடவுள் நம்பிக்கை உள்ள எங்கள் மூன்று சமயங்களையும் நாங்கள் முற்ருகவும் சமத்துவமாகவும் ஏற்கிருேம். அரசாங்கத்திற்கு சமயம் இருக்கக் கூடாது என்று சொல்லுகிருேம். சிங்கள பௌத்தர் போல ஒரு சமயத்தை ஏற்றியும் மற்றச் சமயத்தைத் தாழ்த்தியும் வைக்க மாட்டோம். எங்கள் சமுதாயத்திலோ அரசிலோ பெரும்பான்மைச் சமயம் என்றும் சிறுபான்மைச் சமயம் என்றும் சிந்திக்க இடமில்லை சரிநிகர் சமத்துவமே எங்கள் கொள்கை.

"நாம் தனி நாடமைக்கும் பொழுது சிங்கள நாட்டில்

—5-ம் பக்கம் பார்க்க

### கொழும்பில் தமிழ் மகளிர் பேரவை

தமிழ் மகளிர் பேரவை கொழும்பில் தனது கிளையொன்றை மிகவிரைவில் தொடங்கவிருக்கிறது. இக்கிளையில் உறுப்பினராக விரும்பும் கொழும்புவாழ் தமிழ் மகளிர், அமைப்பாளர் தமிழ் மகளிர் பேரவை மே/பா ஆசிரியர் சுதந்திரன், 194 ஏ, பண்டாரநாயகவீதி கொழும்பு-12 எனும் முகவரிக்குத்தொடர்புகொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

## "ஒவ்வொரு தமிழனும் தமிழச்சியும் சிறைசெல்லத் தயாராக வேண்டும்!"

### கொழும்பில் கதிரவேலுப்பிள்ளை பேச்சு!

"தமிழ் ஈழவிடுதலைப் போராட்டத்தில்ஒவ்வொரு தமிழனும் தமிழச்சியும் ஒருமுறையாவது சிறைக்குச் செல்லத் தம்மைத் தயார் படுத்திக்கொள்ள வேண்டும்!

இவ்வாறு கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசிய கோப்பாய் பா. உ. சிந்தனைச்சிற்பி சி. கதிரவேற்பிள்ளை வேண்டுகோள்விடுத்தார். திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் மேலும் பேசியதாவது:-

"நாம் இப்போது ஒரு சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிருேம். இது ஒருவர் இருவரது வேலையல்ல—ஒவ்வொருவரது சிந்தனையும் செயலும் இதில் ஈடுபடுத்தப்படவேண்டும். சிந்தனை சொல்லாகி, சொல் செயலாகி, செயல் செயமாகி, வளமான தமிழ் ஈழம் உருவாகவேண்டும். 400 வருடங்களின் முன் அந்நியனுடன் நாம் ஓர் விடுதலைப் போராட்டத்தை நடத்தினேம். 400 வருடங்களின் பின்னர் இப்போது மீண்டும் ஒரு சுதந்திர இயக்கத்தை நடத்த முன்வந்திருக்கிருேம். எனவே எங்களுக்கு இது ஒரு புதிய விஷயம். எனவே உலக நாடுகளில் மற்ற இனங்கள் எவ்வாறு சுதந்திர இயக்கத்தை நடத்தியிருக்கின்றன என்பதை ஆராய்ந்த அவற்றில் நாம் பிற்பற்றக் கூடியது எது நமக்கு வெற்றிதரக்கூடிய பாதை எது என்பதை நாம் ஆராயவேண்டும். இதற்குச் சிந்தனை அவசியம்.

தமிழ் ஈழம் என்று நாம் கூறுகிற போது அது அடையக் கூடிய இலட்சியமா? அல்லது ஒரு கற்பனையா என்று சிலர் ஐயப்படுகின்றனர். வேறு சிலர் தமிழ் ஈழத்தை அடைவதாக இருந்தால், அதற்கு வழியென்ன என்று கேட்கிருர்கள்.

நம்மைப் பொறுத்தவரையில் தமிழ் ஈழம் என்பது ஒரு கற்பனையல்ல — நமது மக்களின் சுதந்திர சுபீட்சவாழ்

—5-ம் பக்கம் பார்க்க



பத்தாவது சுடர்
CHUDAR

(தை இதழ்)


### பொங்கலன்று எங்கும் கிடைக்கும்!

- கவிஞர் காசி ஆனந்தன் டாக்டர் சாலை இளந்திரையன், உதயணன், ந. பாலேஸ்வரி, ஈழவேந்தன் ஆகியோரின் படைப்புக்கள்—
- மறுமலர்ச்சி எழுத்தாளர் 'வரதர்' பேட்டி.
- இன்னும் பல வழமையான அம்சங்களுடன் இப்பொழுது தயாராகிக் கொண்டிருக்கிறது!

தனிப்பிரதி: விலை ரூபா: ஒன்று மட்டுமே

தமிழ் ஈழத்தேசியத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அல்வை சி. தர்மநாதன்,
"தமிழகம்,"
உருத்திரபுரம்.

கே: தமிழீழப் பேராட்டத்தில் பெண்களின் பங்கு என்ன?

ப; முதலாவது பணி விடுதலை இயக்கத்தில் ஈடுபடும் ஆண்களைத் தடுக்காமலிருப்பது — இரண்டாவது அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்குவது!

கே: கல்வித் திணைக்களத்திலிருந்து தனிச் சிங்களத்தில் வரும் கடிதங்களை என்ன செய்வது.

ப: பதியுதீன் மாமூத்துக்கு அனுப்புங்கள்!

கே: எதிர்வரும் பெப்ருவரி 4ந் திகதி, துக்கநாளா? அல்லது சுதந்திர நாளாகவா கொண்டாடுவது?

ப: சுதந்திரத் தீர்மான நாளாகக் கொண்டாடுங்கள்!

ஃ

இளைய-தியாகராஜ்,
வெவ்வாளை தெமோதர.

கே: காவல் நிலயங்களிலும், சிறைக்கோட்டங்களிலும், தமிழ் இளைஞர்கள் நடாத்தும் தியாகவாழ்விற்கு கிடைக்கவிருக்கும் பரிசு என்ன?

ப: சுதந்திரத்தமிழ் ஈழம்!

ஃ

புனிதம்,
புன்னாலைக்கட்டுவன்,

கே: தமிழ்நாட்டில் காமராஜ் காங்கிரஸ், இந்திரா காங்கிரஸுடன் சேர்ந்துவிட்டால், அடுத்த தேர்தலில் தி.மு.க.வின் நிலைமை எப்படி இருக்கும்?

ப: ஒன்றும் ஆகாது. கருணாநிதியைவிட திறமைமிக்க தலைவர்கள் யாரும் தமிழகத்தில் இன்று கிடையாது!

கே: தமிழ் வாழ, தமிழன் வாழதேவை ஒரு தனித்தமிழ் நாடு. அத்தனித் தமிழ் நாடு என்று எமக்குக் கிடைக்கும்?

ப: நாம் எவ்வளவுக்கெவ்வளவு எங்களைத் தியாகம் செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு விரைவில் கிடைக்கும்!

ஃ

வி. என். சுரேந்திரகுமார்
இறம்பைக்குளம்
வவுனியா

கே: தமிழ் மக்கள் பிரச்சினை தீர தமிழர் பிரதிநிதிகளுடன் அரசு மாநாடு நடத்த வேண்டும்" என்ற எம் ஜி. மெண்டிஸ் எம். பி. கூறிய காலங்கடந்த கூற்றை இன்றைய நிலையில் தமிழர் கூட்டணி ஆதரிக்குமா?

ப: தனிநாடு பற்றிப்பேசுவதற்கு வருமாறு அரசு அழைத்தால் அதற்கு தமிழர் கூட்டணி செல்வதில் என்ன தவறு.

கே: சிறை வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை அரசு விடுதலை செய்ய வேண்டுமென்று சிங்கள அரசியல் தலைவர்கள் இன்று கூக்குரல் இடுவதன் மர்மம் என்ன?

ப: 'மர்மம்' எதுவாக இருந்தாலும் அவர்கள் அப்படிச் சத்தம் போடுவதால் நமக்கு நட்டம் எதுவும் இல்லையே!

ஃ

சிவா செல்லையா,
கோதண்டர் நொச்சிக்குளம்
வவுனியா.

கே: பெண்களைக் காதலிப்பதற்கும் தன்னாட்டைக் காதலிப்பதற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

கே: இந்த இரண்டு காதலிலும் எதற்கு ஊறுநேர்ந்தாலும் ஒருவனின் தன்மான உணர்ச்சி கிளர்ந்தெழும்; இது ஒற்றுமை. ஒரு பெண் போனால் இன்னொர் பெண்ணை காதலிக்க முடியும்; ஆனால் தன் நாட்டை இழந்தால் இன்னொர் நாட்டை அதற்குப் பதிலாகப் பெற்றுக் கொள்ளவே முடியாது இதுவேற்றுமை!

ஃ

நா. அரசன்
காலி

கே: தனிநாடு அவசியம் என்று ஏன் கேட்கிறீர்கள்?

ப: சிங்களவர்கள் தங்கள் "சிறீலங்காவை" தனியொரு பௌத்த சிங்கள நாடாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களின் ஆசைக்கு தமிழர்களாகிய நாம் தடையாக இருக்காமல், அவர்களை விட்டுப்பிரிந்து எங்கள் தமிழ் ஈழத்தை நாம் முன்பிருந்ததுபோல மீண்டும் தனிநாடாக அமைத்துக் கொள்வது அவர்களுக்கும் நல்லது; எங்களுக்கும் நல்லது அல்லவா?

ஃ

எஸ். வரதராஜன்,
10ம் வட்டாரம்,
புங்கை நகர்

கே: அடுத்த பொதுத் தேர்தலில் சுதந்திரன் ஆசிரியர் போட்டியிடுவாரா?

ப: ஏன் அவர் நிம்மதியாக இருப்பது உமக்குப் பிடிக்கவில்லையோ?

ஃ

இ. பரிபூரணன்,
வெலியடை குறாப்,
மெலிமடை.

கே: சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம் என்ற பாரதிக்கு ஏனிந்தத் தீவு சிங்களத் தீவாகத் தோன்றியது?

ப: பாரதி கிடக்கட்டும் — ஏன் இப்போது மட்டும் என்னவாம்? சிங்களவனுக்கு முன்பிருந்தே தமிழனுக்குச் சொந்தமாகவிருந்தது ஈழம் என்கிற வரலாற்றுண்மை தமிழ்நாட்டிலுள்ள மிகப் பலருக்குத் தெரியாதே! நான் தமிழ் நாட்டுக்குச் சென்றிருந்தபோது, "நீங்க சிலோன்காரரா? அப்படியானல் எப்படித் தமிழ் பேசுநீங்க—சிங்களம் அல்லவா பேசவேண்டும்" என்றுகூட என்னிடம் சிலர் கேட்டார்கள்!

ஃ

கரவை க. மனோ,
மேல்கரவை.

கே: தமிழ் நாட்டுக்கு ஒரு அண்ணா போல தமிழ் ஈழத்துக்கு ஒரு அண்ணன் யார்?

ப: இதில் சந்தேகமென்ன நிச்சயமாக அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களேதான்!

கே: திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தைப் போல தமிழ்ப் பெண்கள் எல்லோரும் தமிழ்த் தொண்டு செய்தால் என்ன?

ப: நான் அதை வேண்டாமென்று கூறவில்லையே!

ஃ

ஆனந்ததாசன்,
ஈழத் தமிழகம்,
யாழ்ப்பாணம்.

கே: கலாநிதி இராஜ இராஜேந்திரன் அவர்களின் முகவரி என்ன?

ப: அவரது முகவரியைத் தரக்கூடிய நிலையில் இப்போது நான் இல்லை!

ஃ

ரி. அனுமான்,
நெடுங்கேணி.

கே: தமிழ் இனம் ஈழத்தில் விடுதலையடைந்தபின் தாங்கள் என்ன செய்வீர்கள்?

ப: ஏனைய வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் விடுதலைக்காகப் போராடுவேன்!

கே: என்னைப்பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: படுகஞ்சப் பேர்வழி நீங்கள்! ஒரு அஞ்சலட்டை நிறைய இடமேயில்லாமல் எழுதித்தள்ளியிருக்கிறீர்களே!

ஃ

கே: வேலுப்பிள்ளை,
கொழும்பு—6.

கே: மகாவலித் திட்டத்தைப் பற்றி இப்போது பெரிதாகப் பேசப்படுகிறதே. இத்திட்டத்தின் மூலகர்த்தா யார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

ப: ஓ... நன்றாகத் தெரியுமே! முதன் முதலாக இத்திட்டத்தை உருவாக்கியது ஒரு தமிழ் மூளைதான்! சட்டசபை உறுப்பினராக இருந்த காலஞ்சென்ற திரு. பாலசிங்கம் தான் முதன் முதலில் மகாவலியைத் திருப்பலாம் என்பதை எடுத்துக் கூறியவர்!

ஃ

செல்வி. வே. விமலாம்பிகை
முதலைக்குடா.

கே: உலகத்தைச் சுற்றி வந்த இலங்கைத் தமிழர் யார்?

ப: வணக்கத்துக்குரிய தனிநாயக அடிகளார்!

கே: தமிழர்களாகப்பிறந்தும் தமிழர்களுக்கே துரோகம் புரியும் தமிழர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: உடன் பிறந்தே கொல்லும் வியாதி!

● கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும்.

திருவாளர் குயுக்தியார்,
194 ஏ. பண்டாரநாயகா வீதி,
கொழும்பு-12.

## எழுபத்திநாலின் ஜனவரிபத்து!

—ஈழமாறன்—

அனைத்துல கத்தமி ழாராய்ச்சி மன்றம்
ஜனவரி எழுபத்தி நாலாவ தாண்டில்
சங்கிலித் தமிழ்முடி தனியர சாண்ட
மங்காத் தலைநகர் யாழ்ப்பா ணத்தில்
ஆழ்ந்த தமிழை ஆராய வென்று
போந்து பெருகினர் பெருவிழா வெடுக்க

தோட்டத்து மரங்கள் தென்னை பனைகள்
நாட்டிய நிலம்விட டேகின வீதிக்கு
கமபனின் கற்பனை அயோத்திக் காட்சியை
நம்மவா நகரில் நடைமுறைப படுத்தினர்
ஒன்பது நாட்கள் இன்பத் திருவிழா
அன்னைத் தமிழுக்கு எடுத்தும் களைத்திலர்.

சாலை அரங்கினில் தமிழை ஆய்ந்தனர்
மாலை அரங்கினில் கலைகள் காட்டினர்
நாட்டு வளங்களும் நற்றமிழ் வகையும்
காட்சி வைத்துக் கண்கள் பறித்தனர்
பாரதி பாடிய பாட்டின் பொருளாய்
தெருவெ லாந்தமிழ் முழக்கம் செய்தனர்.

இன்பத் தமிழரின் இலக்கியக் காட்சிகள்
ஒன்பதாம் நாளில் ஊர்வல மாய்வர
மறுநாள் துயரை மனதில் உணர்ந்தோ
பெருநாள் இதுவென பொங்கி மகிழ்ந்தோ
சோவென வானம் சொரிந்த வகையும்
மூவர் மாண்டதும் முன்னறி விப்போ!

ஒளிசேர் தமிழில் உள்ளம் ஒன்றிய
வெளிநாட் டினரை விழியால் காண
பத்தாம் நாளில் பெரியதோர் கூட்டம்
முற்ற வெளியை மூடி நின்றது
பாதை ஒழுங்கு பாதித்த தென்று
பாவியர் கூட்டம் பேயென வந்தது

கண்ணிய மில்லா காட்டு நரிகளின்
கண்ணீர் புகையால் குண்டாந் தடியால்
தாய்கள் அங்கும் சேய்கள் இங்கென
தாயின் மக்கள் நாயென ஆனர்
ஆடையில் லாதவர் அணிக ளிழந்தவர்
பாடையில் போயின பத்துத் தமிழுயிர்.

அடிமைகள் நாமென அகிலம் அறிந்திட
குடியர சிந்தக் கொடுமை புரிந்ததோ?
தமக்கென அரசு தமிழருக் கொன்று
அமைப்ப தேவழி என நினை வூட்டும்
ஈழத் தமிழர் இதயம் மறவா
எழுபத்தி நாலின் ஜனவரி பத்து!

# கவிஞர் நீலாவணனைப் பற்றி சில நீங்கா நினைவுகள்!

● கவிஞர் நீலாவணன் அவர்களின் நினைவு தினம் சனவரி 11ம் நாளாகும். அதையொட்டி கவிஞரை இங்கு நினைவுகூருகிறார் கவிஞர் மருதூர் வாணன்.

**1951-ம்** ஆண்டு, மருதமுனை கலவன் பாடசாலையில் (இப்போது அல்மனார் மகாவித்தியாலயம்) நான் 4ம்வகுப்புப்படித்துக்கொண்டிருந்த காலம். ஒரு காலம். ஒரு கலைவிழா நடந்தது. கேசவன் சின்னத்துரை (நீலாவணன்) என்னிடம் ஒரு பாடலைத் தந்து பாடச் சொன்னார்.

"செந்தமிழ் நாடென்னும்
போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது
காதினிலே..."

என்ற பாடலை நான் இனி[illegible] குரலில் பாடி[illegible]. இந்தப் பாடலைச் சின்னத்துரை ஆசிரியர்தான் எழுதியிருப்பார், என எண்ணிக்கொண்டிருந்தேன். அந்தப் பாடலை நினைத்துப் பாடும்பொழுது, மனக் கண் முன் சின்னத்துரை ஆசிரியர் சிரித்துக்கொண்டிருப்பது போலிருக்கும்.

பின்னர்தான், எனது 4ம் வகுப்பாசிரியர் ஜீவம் ஜோசப் கூறினார், அது அமரகவி பாரதியாரின பாடல் என்று " இவர் நல்ல தமிழர் விடுதலைப் பாடல்களை எழுதுவார். அவரின் பாடல் இதோ,' என்று சில வரிப்பாடலை,

தமிழன் என்ற உயர்ந்த
மக்கள்
தலைநிமிர வாழல் வேண்டும்!
இமியும் மாற்றார்க்
கடிமை கொள்ளா
இணையற் றோராயாளல்
வேண்டும்!

என்ற வரியை இதுகாறும், பல தமிழரசு மேடைகளில் நான் பாடி வருகிறேன். நிசமாக அது அமரகவி நீலாவணனின் பாடலாக இருக்கும் என்பதற்கு, இதோ ஒரு சான்று—

எங்கள் கிராமம் 47ம் ஆண்டிலிருந்து தமிழரசுக் கட்சிப்பற்றுள்ள கிராமம். பட்டிருப்புத் தொகுதியாக இருந்த காலம், மகாதயாகி, அமரர் இராசமாணிக்கம் ஐயாவின் தேர்தல் கூட்டங்களில் (54 தொடக்கம்) மூவர்ணக் கொடி ஏந்திச் சைக்கில் சவாரி செய்து கும்மியும் பாடி வருவதுண்டு.

ஒருநாள் எனது மூவர்ணக் கொடியுடன் சைக்கிளை மறித்துப் பிடித்தார் ஒருவர். (எதிர்மன்னசிங்கம் கட்சிக்காரர்) என்னைப் பயமுறுத்திக் கொடியைப் பறித்து அடித்துப் பேசினார், நிர்வாணப் பேச்சு.

அப்போது, தெய்வம் போன்று, சின்னத்துரை ஆசிரியர் ஓடோடி வந்தார். (அப்போது சேனைக்குடியிருப்புத் தமிழ் பாடசாலையில் படித்துக் கொடுத்தாராம்.)

—7-ம் பக்கம் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை பத்து

அன்பு நண்பா,

இன்னிசை, எழிற்கோலம், வண்ண விளக்குகள், வாழைகள் கமுகுகள் தோரணங்கள், வஞ்சியரின் கொஞ்சு தமிழ்ப் பேச்சுக்கள், குழலோசை, தமிழோசை, குறைவிலா அறிஞர் தரும் குறளோசை, ஆராய்ச்சிமன்றத்தில் அறிஞர்கள் வாதிடும் சொல்லோசை, அங்கிங்கெனாதபடி எங்கணும் நீக்கமற நிறைந்து நின்று எதிரொலித்திட்ட தமிழ் வாழ்க தமிழ் வெல்க எனும் வாழ்த்தோசை, எங்கணும் எழுச்சி, எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி, பிறவிப் பெரும்பயனை அடைந்ததுபோன்ற திருப்தி, பேதங்கடந்து ஈழத் தமிழர் இணைந்தனர், தமிழின் பகைவர் எங்கோ மறைந்தனர் என்கிற இறுமாப்பு, அந்த இறுமாப்பினால் தெம்மாங்கு இசைத்திடும் தீந்தமிழ் நெஞ்சங்கள் இப்படி இதயம்பூரித்திடும் எண்ணற்ற இன்பியல் காட்சிகள், இனிய நினைவுகள், எழுச்சித் தோற்றங்கள் ஓர் புறம்!

ஐயகோ அம்மவோ, தெய்வமேயில்லையோ என்கிற நெஞ்சைப் பிழிந்திடும் அலறல்கள்; ஆடைகுலைந்து அவிழ்ந்து விழுந்திட உள்ளாடையுடன் அஞ்சி ஓடிடும் நம உயர்த் தங்கையர்; அவர்களை வெறி நாய்கள் போல விட்டுத் துரத்திடும் காக்கியுடையினர்; கண்மணியாம் கைக் குழந்தைகளைப் பிரிந்து உள்ளம் பேதலித்திட, ஓடிடவும் வழியின்றி உலுத்தர்களால் துரத்தப்படும் அருமைத் தாய்க்குலத்தினர்; தமிழர்களின் மண்டையைப் பிளந்து குருதி குடித்திடும் குண்டாந்தடிகள்; பொலு பொலென வந்து விழுந்திடும் கண்ணீர்ப்புகைக் குண்டுகள்; துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள்; சிங்கள வெறியர்களின் சப்பாத்துக்கால்களுக்குள் சிக்கி நசுங்கிடும் செந்தமிழ் நெஞ்சங்கள்; ஆடைகளை இழந்து, உடமைகளை இழந்து, உற்றார் உறவினரைப் பிரிந்து, கற்பைக்காத்திட ஓடி ஒழிந்திடும் கன்னியர்; அவர்களைக் காத்திட தங்கள் உயிரையும் திரணமாக மதித்து முனைப்புடன் பணியாற்றும் தமிழ்க் காளையர்; ஐயகோ ஐயகோ நினைத்தாலும் நெஞ்சம் பதைத்திடும் அந்தப் பயங்கர இரவில் அதோ ஒன்பது தமிழர்கள்—இன்பத் தமிழ் கேட்டபடி மயங்கிக் கிடந்தவர்கள்—பிணமாகிக் கிடக்கின்ற கோரக்காட்சி; பசுஞ் சோலையாக இருந்த அந்த இடம் பாலைவனமாக காட்சிதருகிறது; பைந் தமிழ் முழங்கிய அந்த இடத்தில பச்சை இரத்தம் கொட்டிக் கிடக்கிறது; மகிழ்ச்சி பொங்க மறத் தமிழர் கூடியிருந்த அந்த மண்டப வாயில் முன் மலையாகக்கிடக்கும் செருப்புக்குவியல்கள்-பிணமாகிப்போன தமிழர் உடம்புகள்; சிங்கள வெறி நாய்களின் பயங்கர ஊளைச் சத்தங்கள்......! ஆம், இத்தகைய துன்பியற் கட்சிகள், துடிக்க வைத்திடும் நினைவுகள். இவற்றை எண்ணிடும் போது உடைப் பெடுத்திடும் கண்ணீர் வெள்ளம்—இவை ஓர் புறம்!

ஆம் நண்பா, சனவரி பத்தாம் நாளை எண்ணிடும் போது, மூத்தனைய நம் முழு நிலாத் தமிழுக்கு தித்திக்கும் விழா வெடுத்த தீஞ்சுவைக் காட்சியும் — விழா முடிவில் வெறி பிடித்த சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஏவல் நாய்கள் முத்தனைய நந் தமிழர் பதின்மரைப் பலிகொண்டு பயங்கர வெறிபிடித்து ஆடிய கோரக்காட்சியும்— ஆக இரண்டுமே நம் நினைவுக்கு வந்து நெஞ்சில் அலைமோதுகின்றன;

இதுபோன்றதோர் ஏற்றமிகு விழாவை இதுவரையில் தமிழ் ஈழம் கண்டதில்லை; தமிழே தமிழனின் உயிர் மூச்சு—அதுவே அவனது வாழ்வில் ஒரே பேச்சு — என்பதனை அகிலத்துக்கு ஐயந்திரிபற எடுத்துக் காட்டிய எழில்விழா இஃதென எல்லோரும்மகிழ்ந்திட; இத்தனைமொழியுணர்ச்சியா ஈழத்தமிழனின் உள்ளத்தில் —வேறு எத்தனையோ மாநாடுகள் இதுவரையில் பார்த்துவிட்டோம் — இது போன்ற எழுச்சியும் உணர்ச்சியும் கொண்ட விழாவை எங்கணும் யாம் கண்டதில்லையென்று வெளிநாட்டு அறிஞர் பெருமக்கள் உள்ளம் நெக்குருகி உரைபகர்ந்திட; தமிழ் ஈழம் தனிநாடாகிய பின்னர் முதன் முதலாக கொண்டாடப்படவிருக்கும் விடுதலை நாள் கொண்டாட்டமோ இஃதென்று கண்டோர் மயங்கிட; தமிழன் எடுத்த விழா தனிப் பெரும் விழாவாகி தரணிமெச்சிட தமிழ்த் தாய் அகமகிழ்ந்திட சிறப்புற்றது கண்டு—பொச்சரிப்படைந்தோர்—பொறாமைத் தீயில் கருகியோர் — நறநறவென்ற பல்லைக் கடித்தோர்—இதுகளுக்கும் ஒரு விழாவா, அடிமைகளுக்கு விழா ஒரு கேடா என்று ஆர்ப்பரித்து எழுந்து — விழாவின இறுதி நாளன்று ஆடி முடித்த துரோக நாடகம் — துன்பியல் சரித்திரம் ஈழத்தமிழனின் நெஞ்சைவிட்டு அகல முடியாத ஒரு கண்ணீர்க் காவியமாகும்; செந்நீரில் வரைந்த ஓவியமாகும்!

ஈழத்தமிழனே! நீ அடிமையிலும் அடிமை! அடிமையிலும் முழு அடிமை! சிங்கள ஏகாதிபத்தியத்தின் காலடியில் கிடக்கவேண்டியவன் நீ! சிங்கள எசமானர்களின் விருப்பத்துக்கு மாருக — ஈழத்தில் நீ நடந்தால் — தமிழ் தமிழென்று தலையில் தூக்கி வைத்து உனது மொழியை நீ கொண்டாட முயன்ருல் — இதுதான் நடக்கும்; இன்னமும் நடக்கும் என்பதை மானரோசமின்றி சோற்றுலடித்த பிண்டமாக சோற்றுத்துருத்திகளாக் கிடந்த தமிழர்களுக்கு சிங்கள ஏகாதிபத்தியம் உணர்த்தி அவனை வீறுகொள்ளவைத்த நாள் சனவரி பத்து!

ஆம், இந்நாட்டில் தமிழ் வாழவேண்டுமென்ருல் — தமிழன் தன்மானத்துடன் சுதந்திர மனிதனுக வாழவேண்டுமென்ருல், சிங்கள ஏகாதிபத்தியத்திலிருந்து நாம் விடுபட்டேயாகவேண்டும்—தனித் தமிழ் ஈழத்தை உருவாக்கியே தீரவேண்டும் என்பதை ஒவ்வொரு தமிழனுக்கும் உணர்த்திய நாள் சனவரி பத்து ஆகும்!

தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்ற புரட்சிக் கவிஞரின் பாடலுக்கு இலக்கியமாகி— பேராசிரியர் நயினு முகம்மதுவின் நறுந் தமி

## அரசியல் மேடை

ழோசையைச் சுவைத்தபடியே—சிங்கள வெறி நாய்களின் மிலேச்சத் தாக்குதலின் விளைவாக —தமிழுக்கு உயிர் தந்து தமிழர் நெஞ்செலாம் இடங்கொண்ட அந்த ஒன்பது புனித ஆத்மாக்களும் எட்போதும் எங்கள் வீரவணக்கத்துக் குரியவை! தமிழுக்கு உயிர் தந்த 14 வயதுத் தம்பி சின்னத்தம்பி நந்தகுமார், 15வயதுத் தம்பி வேலுப்பிள்ளை கேசவராஜன், 21 வயது இளங்காளை இராசதுரை சிவானந்தம், 26 வயது இளைஞன் பரஞ்சோதி சரவணபவன், அதே வயதுள்ள ராஜன் தேவரத்தினம், வைத்தியநாதன் யோகநாதன், சிக்மறிங்கம் மாஸ்டர், சிதம்பரி ஆறுமுகம், சின்னத்துரை பொன்னுத்துரை ஆகிய தியாகிகளை நெஞ்சில் இருத்தி அவர்கள் அன்று செய்த தியாகத்திலிருந்து சுதந்திரத் தமிழ் நாட்டைக் கட்டியெழுப்புவோம்!

இவர்களை இழந்ததால் மஞ்சள் குங்குமத்தையும் மங்கல நாணையும் இழந்த தாய்மார்கள் — பிள்ளையைப் பறிகொடுத்த பெற்றோர்கள்—அண்ணன் தம்பியை பறிகொடுக்க அருமைச்சகோதரர்கள் வ க்கின்ற கண்ணீருடன் எங்கள் இரத்தக் கண்ணீரையும் சங்கமமாக்குவோம்!

அவர்கள் அன்று சிந்திய கண்ணீர் — அவர்கள் அன்று இட்ட சாபம்—அவம் போகாது—அவம் போகவில்லையென்பதை காலதேவன் திட்டவட்டமாக நமக்கு உணர்த்திவிட்டதையும் நிதர்சனமாக கண்டு கொண்டோம்!

தமிழ்த் தியாகிகளின் நினைவாக சென்ற 1974 சனவரி 10ம் நாள் வீரசிங்கம் மண்டபத்துக்கு எதிரே நிறுவப்பட்ட நினைவுத்தூண்களை உடைத்தெறிந்த நெஞ்சமிலாதோர் — நீசத்தனத்தார் — நெறிகெடடோர் — தறிகெட்டு ஓடுகின்ற விதத்தில் மீண்டும் இந்த சனவரி பத்தாம் நாள் அங்கோர் சிலையெழுகிறது நிலைகுலையாத் தமிழர்க்கு நிலையான நினைவுச் சின்னம் அமைகிறது—தமிழ்த் தாய் நெஞ்சம் குளிர வாழ்த்துகிருள்!

நாம் விடுதலையடைகிறபோது — தனிநாடு அமைகிறபோது தமிழ்த் தியாகிகள் அனைவர்க்கும் அங்கே நிலையான நினைவுச் சின்னங்கள் அதற்குரிய அரச மரியாதைகளுடன்—நிறுவப்பட்டே தீரும்!

நண்பா, தமிழ் மாநாட்டு இறுதி நாளான 1974 சனவரி பத்தாம் நாள் சம்பவங்கள் பற்றி—[illegible] பொலிஸ் அட்டூ ழியம் பற்றி விசாரணை [illegible] டி நம்மவர்கள் நாடாளுமன்றத்திலே எடுத்துரைத்திட்ட போது ஆட்சியாளர்கள் உண்மைக்குப் புறம் பானவற்றைக்கூறி பிரச்சினையை திசை திருப்பி வருகின்றனர்!

தமிழ் மாநாட்டு இறுதி நாளன்று உயிரிழந்தவர்கள் மின்சாரம் பாய்ந்தே இறந்திருக்கின்றனர்; இயற்கை மரணம் அது என்று யாழ் நீதிபதி தீர்ப்பளித்து விட்டார்; பிறகேன் விசாரணைக் குழு என்பதுதான் அம்மையாரினதும், அம்மையாரின் துணையமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடியினதும் திசை திருப்பும் வாதமாகும்!

நீதிபதியின் மரண விசாரணைத் தீர்ப்பின் பின்னுல்தான்— வடபகுதி சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களும், அனுரா பண்டாரநாயகாவும், அமைச்சர் குமாரசூரியரும் ஏனைய ஆளுங்கட்சி எடுபிடிகளும் விசாரணைக் குழு நிறுவப்படும் என்று அடிக்கடி பத்திரிகைகளில் தம்பட்டம் அடித்து வந்தபோது அம்மையாரும் அரை அமைச்சரும் எங்கிருந்தார்களோ?

விசாரணைக்குழு நிறுவப்படவேண்டும் என்ற கோருவது பத்துப்பேர் எப்படிச்செத்தார்கள் என்பதை ஆராய்வதற்கு மட்டுமல்ல அப்பாவிகளாக—அமைதியாக குடும்பம் குடும்பமாக கூட்டத்துக்கு வந்திருந்த சட்டத்துக்கு கட்டுப்பட்ட மக்களை காரணமேதுமின்றிப் பொலிசார் காலித்தனமாக தாக்கியது நியாயமானதா? கண்ணீர்ப்புகை வீசியதும் குண்டாந்தடி கொண்டு தாக்கியதும் சரியான செயல்தானு? மின்சாரக்கம்பி அறுந்துவீழ்ந்து அதனுல் மரணம் சம்பவித்தது என்ருல் மின் சாரககம்பியை அறுத்துவிழுத்தியவர்கள் யார்? பொலிசார் இவ்வாறு காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் ஈடுபடாதிருந்தால், இத்தகைய அசம்பாவிதம் ஏற்பட்டிருக்குமா? என்பனபோன்ற கேள்விகளுக்கு விடைகாணவே பாரபட்சமற்ற விசாரணைக்குழு தேவை என்று தமிழர் கூட்டணியினர் கோரி நிற்கிருர்கள்!

மரணவிசாரணையை மேற்கொண்ட நீதிபதி கூட தமது தீர்ப்பின் இறுதியில், ''ஜனத்தனுல் பாதுகாப்புக்கு ஏற்படக்கூடிய ஆபத்து—பொலிசார் சுலையிடவேண்டிய அளவுக்கு அதிகமாக இருந்ததாஎன்பதை உரியஅதிகாரிகளே தீர்மானிக்க வேண்டும்'' என்று விசாரணைக் குழுவொன்றை நியமிப்பதற்கு வழிவிட்டே தனது தீர்ப்பைக் கூறியிருந்தார்!

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளரான டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா அவர்களே, பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம செய்ததாகவும் அது துப்பாக்கி வேட்டுச் சத்தந்தான் என்பதை தம்மால் உறுதியாக கூறமுடியும் என்றும் தமது சாட்சியத்தில் கூறியிருந்ததை நாம் இங்கு நினைவு கூரவேண்டும!

உண்மையில், ஒன்றில் பாரபட்சமற்ற விசாரணைக் குழுவொன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் அஞ்சுகிறது; அப்படி நிறுவினுல் பாரதூரமான பல உண்மைகள் வெளி வந்துவிடும்; தமிழ் மக்களின் மீது காரணமின்றித் தான் நடத்திய காட்டுமிராண்டித் தாக்குதலின் பின்னணி வெளிவந்து விடும் என்று அரசு பயப்படுகிறது.

அல்லது—

தமிழர்களை நாம் நினைத்தபோது அடிப்போம்—அடக்குவோம்—நசுக்குவோம் — சுட்டுக்கொல்லுவோம் — நாம் வைத்ததுதான் சட்டம் — அடிமைகளுக்கென்ன விசாரணை— என்கிற திமிர் அரசுக்கு இருக்கவேண்டும்!

ஆனுல் நண்பா, நம்மைப் பொறுத்தவரையில், இந்த சிங்கள அரசாங்கத்திடமிருந்து கிஞ்சிற்றும் நீதியை எதிர்பார்க்கவில்லை— எதிர்பார்க்கவும் முடியாது! நீதியை வழங்கும் பொறுப்பை இறைவனிடம் விட்டு விட்டு — நியாயத்தின் வழியில் நின்று எங்கள் பிறப்புரிமைக்காக — தமிழ் ஈழத்தின் விடுதலைக்காக போராடிவருகின்ருேம்! இறைவன் நீதி வழங்குவான் என்பதிலே எனக்கு அசைக்கமுடியாத நம்பிக்கையுண்டு! அவன் நீதி வழங்கியுமிருக்கிருன் எத்தனையோ தடவைகளில்! அந்த நம்பிக்கையுடன் நம் கடமையைச் செய்வோம்! விடுதலை காண்போம்!

உன் அன்புத் தோழன்.

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## செயலில் இறங்குவோம்!

தனித்தமிழ் ஈழம் என்பது இன்று ஈழத்தமிழினத்தின் இதய கீதமாகிவிட்டது; இறுதி இலட்சியமாகிவிட்டது; தமிழ் சமுதாயத்தின் வாழ்வுப் பிரச்சினையாகிவிட்டது!

தனித் தமிழ் ஈழத்தை நாம் நிறுவாவிடின் — இந்நாட்டில் நமக்கு வாழ்வில்லை; வளமில்லை; சுதந்திரமில்லை; சுபீட்சமில்லை என்பது உறுதியாகிவிட்டது!

'தனித்தமிழ் ஈழம்' எனும் இலட்சியத்தை முன்வைத்து ஒரு மாபெரும் சுதந்திரப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டிய ஒரு புனிதமான தெய்வீகப் பணியை ஈழத்தமிழ் சமுதாயத்தின் சார்பில் தமிழர் கூட்டணி இன்று ஏற்றுக்கொண்டிருக்கிறது.

தமிழர் கூட்டணியின் தலைமைப்பொறுப்பில் இருக்கின்ற ஒருசில தலைவர்களும் பிரமுகர்களும் மட்டுமே போராடியோ இயக்கத்தை நடத்தியோ இதில் வெற்றி கண்டு விட முடியாது — தமிழ் சமுதாயம் முழுவதும் கடடுக்கோப்புடன் இந்தச் சுதந்திர வேள்விக்கு தமது பங்கை செலுத்தினுல் மட்டுமே வீர சுதந்திரத்தை நாம வென்றெடுக்கமுடியும்!

'தமிழ் ஈழம்' பற்றிய பிரசாரங்களை திட்டமிட்டு வேகப்படுத்தவும் — தமிழ் சமுதாயத்தை சாதி சமய பிரதேச வேறுபாடுகளின்றி ஐக்கியப்படுத்தி — தமிழ் ஈழ சுதந்திர இலட்சியத்தை முன்வைத்து தொடர்ச்சியான நேரடிப்போராட்டங்களை இவ்வாண்டு மத்தியில் ஆரம்பிக்கவும் கடைசியாக நடைபெற்ற தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு தீர்மானித்திருகிறது.

பெப்ரவரி 4ம் நாள் தேசிய அரசுப் பேரவையில் முன்வைக்கப்படவிருக்கும் தனித் தமிழ் ஈழத் தீர்மானத்திற்குப் பின்னர் — அத்தீர்மானத்தின் அடிப்படையில் சுதந்திர இயக்கத்தை ஆரம்பிக்க தமிழர் கூட்டணி எடுத்துள்ள முடிவு முற்றிலும் சரியானதே.

ஆனுல் ஒன்றை மட்டும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்!

தீர்மானங்களை அழகாக நிறைவேற்றி விடுவது மட்டுமே நமது பணியாக இருந்து விடக்கூடாது.

தீர்மானங்கள் செயலுருப்பெறுவதற்கு தமிழர் கூட்டணியிலுள்ள அத்தனை பேரும் அந்தரங்க சுத்தியுடன் முழு மூச்சாக இதில் ஈடுபட்டாக வேண்டும்! அத்தனை பேருடைய உழைப்பும் இதில் கலக்கவேண்டும்!

ஏற்கெனவே இதற்கு முன்னர் தமிழர் கூட்டணி எடுத்த எத்தனையோ தீர்மானங்கள் செயலுருப் பெருமல் வெறும் ஏட்டுச்சுரைக்காயாக மட்டுமேயிருந்து விட்டதை சில வாசகர்கள் நமக்குச் சுட்டிக்காட்டி — கடைசியாக எடுத்த தீர்மானங்களுக்கும் அதே நிலைமை ஏற்பட்டு விடக்கூடாதென்றும், தமிழர் கூட்டணியிலுள்ள அத்தனை பேரும் இவற்றை நடைமுறைப்படுத்திட இப்போதிருந்தே உழைத்திட வேண்டுமென்றும் எழுதியிருக்கிறார்கள்!

நாம் முன்னரும் பல தடவைகளில் இப்பத்திகளில் சுட்டிக் காட்டியதைப்போன்று கூட்டணியின் தீர்மானங்கள் செயலுருப் பெறுவதற்கு — அதற்காக உழைப்பதற்கு — முழுநேர ஊழியர்கள் பலர் தேவைப்படுகிறார்கள். ஒரு சுதந்திர இயக்கத்தை பகுதிநேர உழைப்புடன் கொண்டு நடத்தி வெற்றிகாண முடியாது முழு நேரமாக இதிலேயே தம் சிந்தனையை செலுத்தி செயற்படுவதற்கு முழு நேர ஊழியர்களாக பலர் இயக்கத்துக்கு தங்களை அர்ப்பணிக்க முன்வரவேண்டும்.

கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், தலைவர்களில் சிலராவது தங்களை வேறு பொறுப்புக்களிலிருந்து விடுவித்துக் கொண்டு இயக்கத்துக்காக முழுநேர உழைப்பை அர்ப்பணிக்க அவர்களாகவே முன்வரவேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறோம்! 1957ம் ஆண்டு ஆகஸ்ட போராட்டத்துக்கு ஏற்பாடுகள் நடைபெற்ற நேரத்தில் — காலஞ்சென்ற கோப்பாய்க் கோமான் அமரர்வன்னியசிங்கம் தனது சட்டத் தொழிலைத்துறந்து இயக்கப் பணியில் ஈடுபட்டதை இங்கு சுட்டிக் காட்டவிரும்புகிறோம்!

இவ்வாரத் தொடக்கத்தில் யாழ்ப்பாணத்தில் கூடும் தமிழர் கூட்டணியின் நடவடிக்கை குழுக்கூட்டத்தில் இந்த விஷயம் ஆராயப்படும் என்று எதிர்பார்க்கிறோம்!

கொழும்பில் நடைபெற்ற கூட்டணிக் கருத்தரங்கில் கோப்பாய் பா. உ. சிந்தனைச் சிற்பி அவர்கள் குறிப்பிட்டதுபோல, — தமிழர் கூட்டணியின் சிந்தனை சொல்லாகி தீர்மானமாகி விட்டது; இனி அது செயலாகி, செயலாகி, சுதந்திரமாகி, தமிழ் சமுதாயத்திற்கு சுபீட்சம் தரவேண்டும்!

அதற்கு இன்று வேண்டுவது செயல் — செயல் ஒன்றே! முழுமையான உழைப்பு ஒன்றே!!

ஆம், நாம் தமிழர்கள் செயல் வீரர்கள் என்பதை ஆட்சியாளருக்கும் அகிலத்துக்கும் இந்த ஆண்டு எடுத்துக் காட்டுவோம்! அந்த வகையில் எமது பணி அமையட்டும்! செய் அல்லது செத்துமடி என்பதே இவ்வாண்டு நமது ஒரே சிந்தனையாக இருக்கட்டும்!

# தமிழ் மாநாட்டுப் படுகொலையும் வெளி நாட்டுத்தமிழர் கடமையும்!

இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களுக்கு ஒரு கலை கலாச்சாரநிகழ்ச்சியைத்தானும் சுதந்திரமாக நடத்துப் வாய்ப்பு பௌத்த சிங்கள கொய்கம ஆட்சியில் மறுக்கப்பட்டிருப்பதை 1974இல் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது நிரூபணமாக அகில உலகும் கண்டுகொண்டது.

தமிழர் தம் கலாச்சார பண்பாட்டு நிகழ்ச்சிகளைத் தானும் தமது தற்துணிபின் படி தமது சொந்த விருப்பு வெறுப்புக்களுககு ஏற்ப நடத்த சிங்கள பௌத்த இனவாதம் அனுமதிப்பது கிடையாதென்பதற்கு நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை தலைநகரில் அன்றி வேறெங்கும் நடத்த அனுமதிப்பதற்கில்லை என்று அடம் பிடித்தடன், மாநாட்டுக்கு வருகை தாவிருந்தபேராளர்களுக்கு மாநாடு நடைபெறுவதற்கு இரண்டொரு நாள் வரை விசா வழங்க மறுத்தும் அயல்நாடுகளில் இருந்து ஆரம்பத்தில் வருகை தந்த பேராளர் சிலரைப் பலாத்காரமாகவே நாடு கடத்தியதும் உலகப் பிரசித்தம். அப்படி நாடு கடத்தப்பட்ட பேராளர் உலகப் பத்திரிகைகள், வானெலி ஒலிபரப்புக்களை உபயோகித்துச் செய்த தீவிர பிரச்சாரத்துக்குப் பணிந்தே சிங்கள பௌத்த இனவாத சோசலிச அரசு வேண்டாவெறுப்பாக மேற்படி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற இறுதிநேரத்தில் அனுமதித்தது.

ஆயினும், சிங்கள பௌத்த இனவாத அரசின் தடைகளையெல்லாம் மீறி பொதுமக்கள் மாநாட்டைத்தடல்புடலாக நடத்திமுடித்ததைப் பொறுக்கமுடியாத ஆட்சியாளர் பொலீஸ் படையினரைப் பயன்படுத்தி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் நடப்பித்த காட்டாட்சியும் அதன் பெறுபேருக பதினெரு தமிழர் பதைக்கப் பதைக்க உயிர்ப் பலி கொள்ளப்பட்டதும் தெரிந்ததே.

ஜீவகாருணியம் போதிக்க வேண்டிய பௌத்தமதத்தை ஏகபோக அரசாங்க மதமாகப் பிரகடனம் செய்திருக்கும் இனவாத ஆட்சியாளர் மனிதாபிமானத்தையே துறந்தவர்களாக நடைபெற்று முடிந்த படுகொலைகளைத் தானும் விசாரணைசெய்ய ஒரு பகிரங்க விசாரணைக்குழுவை நியமிக்க மறுத்துவிட்ட நிலையில் தமிழ்ப் பெருங்குடி மக்கள் இளைப்பாறிய சுப்பிறீம் கோட் நீதியரசர் இருவரையும், இளைப்பாறிய கிறீஸ்தவ பிஷப் ஒருவரையும் உள்ளடக்கிய பொது விசாரணைக் குழுவொன்றை தாமே நியமித்தனர். அப்பொது விசாரணைக் குழுவே கிறெஸ்ரர் விசாரணைக் குழு. அக்குழுவின் விசாரணை அறிக்கையே கிறெஸ்ரர் விசாரணை அறிக்கை என அழைக்கப்பட்டது. கிறெஸ்ரர் விசாரணை அறிக்கை அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு இறுதி நாள் நிகழ்ச்சியில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் யாவற்றிற்கும் இழப்புகளுக்கும் பொலிசாரின் பொறுப்பற்ற நடத்தையையே பொறுப்பாக்கியது. இருந்தும் அந்த அறிக்கையைத்தானும் சிங்கள பௌத்த அரசு ஏற்று குற்றப் பொறுப்புடையவர்களைத் தண்டிக்கத் தவறிவிட்டது.

மனிதாபிமானமற்ற சிங்கள பௌத்த இனவாதத்தை இடித்துரைப்பதற்காக உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் வெகு சாதுரியமாக கிறெஸ்ரர் விசாரணை அறிக்கையை தேசிய அரசப் பேரவைக் ஹன்சாட்டின் பதிவில் இடம் பெறச் செய்துள்ளார். அதனை இனிமேல் ஹன்சாட்டில் இருந்து அகற்றுவதாயின் அதனையிட்டு தேசிய அரசப் பேரவை ஒரு தனி விவாதத்தை நடத்தவேண்டும். நான்காவது அனைத்துலகத் தமிழாராய்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்ச்சிகளையே விவாதிக்க மறுத்துவிட்ட அரசு அறிக்கையைப் பற்றி விவாதிக்காது பின்வாங்கி விட்டதில் வியப்பில்லை.

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஒரு சர்வதேச மாநாடு. அதில் கலந்து கொண்ட பேராளர்கள் சர்வ நாடுகளையும் பிரதிநிதித்துவப் படுத்தியவர்கள். அனைத்துலக மாநாட்டில் அசம்பாவிதம் நடைபெற்ற சமயம் சயபந்தப்பட்ட மாநாட்டில் கலந்து கொண்ட வெளி நாடுகளது பேராளர்களும் அவதானிகளும்கூடப் பாதிக்கப்பட்டனர். ஆகவே சம்பந்தப்பட்ட அசம்பாவிதங்களை உள்நாட்டு விடயம் என்று கைகழுவி விடுவதற்கு இல்லை. எப்படி உடுவில் பா. உ. திரு. தர்மலிங்கம் தமது சாதுரியத்தால் கிறெஸ்ரர் விசாரணை அறிக்கையை ஹன்சாட்டில் இடம்பெற வைத்தாரோ அதே போன்று அந்த அறிக்கை தமிழ்நாடு சட்டசபை, மேல்சபை, லோக்சபை ஹன்சாட்களிலும் இடம் பெறும்படி முயற்சி செய்யலாம. ம. பொ. சி. குன்றக்குடி அடிகளார், கி. ஆ. பெ. விசுவநாதம், கண்ணதாசன், டாக்டர் ஜனார்த்தனன் போன்றூர் முயற்சி எடுப்பார்கள் என எதிர்பார்ப்போம்.

சாலை இளந்திரையன் அவர்கள் தாம் எழுதி வெளியிட்டுள்ள மாநாடு சம்பந்தப்பட்ட நூலில் நடைபெற்ற அசம்பாவிதம் குறித்து அதிகம் பிரஸ்தாபிக்காது விட்டுவிட்டார். காரணம் சம்பவப் நிகழ்கையில் அவர் நேர்முகமாக சமூகமாகவிராமையே அவரது நேர்மையும், நாணயமும் போற்றப்படவேண்டும். ஆயின் கிறெஸ்தர் விசாரணைக் குழு ஒரு பொது விசாரணைக்குழு. பொறுப்புள்ள இரு இளைப்பாறிய நீதியரசர்களையும், ஒரு பிஷப்பையும் கொண்டது அந்த விசாரணைக் குழு. ஆகவே கிறெஸ்ரர் விசாரணை அறிக்கையை சாலை இளந்திரையன் அவர்கள் தமது மாநாடு சம்பந்தப்பட்ட வெளியீட்டின் இரண்டாவது பதிப்பிலாவது ஓர் இணைப்பாகவானது சேர்த்துக்கொள்ளவேண்டும். ஐந்தாவது தமிழராய்ச்சி மாநாடு நடைபெறுமுன் அவர் தமது மேற்படி இணைப்பை உள்ளடக்கிய இரண்டாவது பதிப்பை வெளியிடுவாராகின் தமிழ் கூறும் நல்லுலகு அவரை வாழ்த்துப்; தமிழ ஈழ மக்கள் அவரைப்போற்றுவர்.

தமிழரின் ஒரு பண்பாட்டு நிகழ்ச்சியையே உயிர்ப் பலி கொண்டு சீர்குலைத்த சிங்கள பௌத்த இனவாத இலங்கை அரசின இனவாதப் போக்கும் உலகப் பிரசித்தம் பெறும். லண்டனில் இலங்கை அரசின் இனவாதப் போக்கைத்தோலுரித்துக் காட்டப் புறப்பட்டுள்ள ஈழ விடுதலை முன்னணியினருக்கு சாலை இளந்திரையன கைகொடுத்து உதவியவராவார்.

—திரவியம்

## தமிழன் நிலை இதுதான்!

"தமிழ் ஈழத்தில் வடபகுதியில் இந்துக்கள திட்டமிட்டு பௌத்தர்களாக மதமாற்றம் செய்யப்பட்டு வருகிறார்கள். இந்நிலையில் இந்து சமயத்துக்கு அங்கு நெருக்கடி ஏற்பட்டு வருகிறது. மேல் மாகாணத்திலும்கரையோரப்பகுதிகளிலும் தமிழ் மொழிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இங்கு பல தமிழர்கள் சிங்களவர்களாக மாறி வருகிறார்கள். இவ்வாறு இன்று தமிழர்களை பலபிரச்சினைகள் எதிர்நோக்கியுள்ளன கல்வித்துறையில் தமிழ் இளைஞர்கள் ஒரு இக்கட்டான நிலையினை அடைந்துள்ளார்கள். கடந்த சில ஆண்டுகளாக இவர்கள் உயர்கல்வி பெற முடியாமல் தவிக்கின்றனர். தொழிலை இழந்த பல மலைநாட்டுத்தமிழர்கள் இன்று பிச்சையெடுத்து திரிகின்றார்கள்."

—நீர் கொழும்பு இந்து இளைஞர் மன்ற விழாவில் பேராசிரியா சு. வித்தியானந்தன் பேசியது.

"TAMILS NEED A NATION - WHY?"

இலங்கை அரசினுல் தடைசெய்யப்பட்ட மேற் கண்ட நூலின் ஆசிரியர் முதன் முதலாகத் தீட்டிய ஒப்பற்ற நூல்

"இலங்கைத் தமிழர் இன்னல் தீருமா?"

சுதந்திரன் வெளியீடாக வெளிவந்து பரபரப்புடன் இப்போது விற்பனையாகிக்கொண்டிருக்கிறது.

விற்பனையாளர்கள் தொடர்புகொளக!—

நிர்வாகி, சுதந்திரன் வெளியீட்டகம்,

194 ஏ, பண்டாரநாயக வீதி, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழாராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதங்களுக்கு

# பிரதமர் கூறிய காரணம் உண்மைக்கு முரணானது!

10.1.76 சனிக்கிழமை மாலை யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் தமிழாராய்ச்சி மாநாட்டு தியாகிகள் நினைவுக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது:-

## தமிழ்த் தியாகிகள் அஞ்சலிக் கூட்டத்தில் தீர்மானம்!

‘‘ஈழத் தமிழினத்தின் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த, துயர் நிறைந்த ஜனவரி 10-ந் திகதிப் படுகொலையின் இரண்டாவது நினைவு தினத்தன்று, நாலாவது தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று ஒன்பதின்மர் உயிர் துறந்த அப் பரிசுத்த பூமியில், தமிழ் மக்கள் திரண்டிருக்கும் இம் மாபெருங் கூட்டம், அநியாயமாக உயிரிழந்த அத் தியாகிகளுக்குத் தனது வணக்கத்தைச் செலுத்தும் அதே நேரத்தில்,

இவ் அக்கிரமம் பற்றிப் பாரபட்சமற்ற விராசணை நடத்தி அதற்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்காது, தன் கடமையில் தவறிய பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயகா 26.11.75 புதன்கிழமையன்று தேசிய அரசப் பேரவையில் பேசும்போது ‘‘திரு. சனர்த்தனம் அக்கூட்டத்தில் பேசமுயன்றதாகவும், அப்போது குழப்பம் ஏற்பட்டதாகவும், அக்குழப்பத்தில் மக்கள் அங்கும் இங்கும் ஓடி மின்சாரக் கம்பிகளில் சிக்கி இறந்ததாகவும்’’ கூறிய ஒவ்வொரு வார்த்தையும் உண்மைக்கு முரணானதென்பதை இக்கூட்டம் எடுத்துக்கூற விரும்புகிறது.

மேலும்,

திருச்சிப் பேராசிரியர், நயினார் முகம்மது பேசிக்கொண்டிருக்கும்போது அப்பேச்சில் ஆழ்ந்து அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த மக்கள் மீது எவ்வித காரணமுமின்றித் திடீரென்று பொலீசார் தாக்குதல் நடத்தினார்கள் என்பதும் அதன் விளைவாகவே இப் பயங்கர சம்பவங்கள் நிகழ்ந்தன என்பதுமே உண்மை என்பதையும்-]

முன்னாள் நீதியரசர் கிரெட்சர் தலைமையில் இப்படுகொலைபற்றி விசாரணை செய்ய மக்களால் நியமிக்கப்பட்ட குழுவினர், ‘‘நிராயுதபாணிகளான மக்கள் மீது அன்றிரவு எவ்விதத்திலும் அவசியமற்ற பலாத்காரத்தைப் பிரயோகித்ததற்காகப் பொலிசாரே குற்றவாளிகள் ஆகின்றனர் என்ற தவிர்க்கமுடியாத முடிவுகளுக்குத்தான் நாங்கள் வரவேண்டியவர்களாய் இருக்கின்றோம்’’- என்று தீர்ப்பளித்திருக்கின்றனர் என்பதையும் இக்கூட்டம் சுட்டிக் காட்டி,

இந்நாட்டில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் தேசிய இனம் தனது சுதந்திரத்தைப் பெற்றாலன்றி அவர்களுக்கு நீதி கிடைக்கமாட்டாதென்பதையும், உண்மை நிலைநாட்டப்பட மாட்டாதென்பதையும் இக்கூட்டம் உணர்ந்து விடுதலைக்காக இடையறாது உழைக்க உறுதிபூணுகின்றது.’’

---

### லண்டனில் மாபெ...

1-ம் பக்கத் தொடர்

நடத்தவுள்ளனர். பேச்சாளர் பூங்காவில் (Spekers Corner) இருந்து ஆரம்பிக்கும் இவ்வூர்வலம் இலண்டனின் பிரதான வீதிகளுடே சென்று பிரித்தானியப் பிரதமரின் இல்லமான 10, டவுனிங் தெருவையடையும் அங்கு பொதுநல நாடுகளின் தலைவர் என்ற முறையில், இலங்கைத் தமிழர்களுக்குச் சொந்தமான தமிழ் ஈழத்தை பிரித்துக் கொடுக்கும்படி சிறீலங்கா பிரதமருக்கு வேண்டுகோள் விடுக்கவேண்டும் என்னும் பொருள் கொண்ட மகஜர் ஒன்று பிரதமர், திரு. ஹெரால்ட் வில்சனிடம் கையளிக்கப்படும்.

ஆதலால் தாயகத்து மண்ணின் விடுதலையில் நம்பிக்கையும் தமிழினத்தின் நல்வாழ்வில் விருப்பமும் கொண்ட ஈழத் தமிழர் அனைவரும் ஈழத்தின் பிரிவில் தமிழனின் தனி நாட்டைக் காணத் துடித்துக் கொண்டிருக்கும் உலகத் தமிழர்கள் அனைவரும், ஈழத்தின் விடுதலையில் தாம் அளிக்கும் முழுமனதான ஆதரவை உலக நாடுகளுக்கு எடுத்துக் காட்டுவதோடு, ஈழத்தில் போராடும் மக்களுக்கு தாம் கரம் கொடுக்கத் தயாராகவுள்ளதை இவ்வூர்வலத்தில் கலந்துகொள்வதன்மூலம் வெளிக்காட்ட வேண்டுமென ஈழவிடுதலை முன்னணி வேண்டுகோள் விடுக்கிறது.

விடுதலைப் போருக்குத் தயாராகவுள்ள தனயர்களின் தந்தைமார் அழைக்கப்படுகிறார்கள்!

பாலூட்டி வளர்த்த மகன் வேலோடு களம் செல்ல வீரத் திலகமிடும் தாய்மார்கள் அழைக்கப்படுகிறார்கள்!

களம் சென்ற காதலன் வெற்றியுடன்வர வீர வாழ்த்துப்பாடும் கன்னியர்கள் அழைக்கப்படுகிறார்கள்!

ஈழத் தாயின் விடுதலைக்குத் தம்முயிரைப் பரிசளிக்கக் காத்திருக்கும் காளையர்கள் அழைக்கப்படுகிறார்கள்!

அனைவரும் வாரீர்! எம் பலத்தைக் காட்டுவோம்!

—இவ்வாறு அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### ஒவ்வொரு தமிழ...

—1-ம் பக்கம் தொடர்

வுக்கு தமிழ் ஈழம் அமைப்பது என்று நாம் உறுதிபூண்டிருக்கிறோம். அதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு நாம் இன்று வந்துவிட்டோம்.

தமிழ் ஈழத்தையடைய முடியுமானால் எந்த வழியிற் செல்வது என்பது அடுத்த கேள்வி. இன்றைக்கு ஐ. நா. சபையில் 144 நாடுகள் சுதந்திர நாடுகளாக அமர்ந்திருக்கின்றன. இந்த நாடுகளில் பல ஆயுதமெடுத்துப்போர் புரிந்து சுதந்திரம் பெற்றவை; வேறு சில அஹிம்சை வழியிற்சென்று சுதந்திரம் பெற்றவை;

இன்னும் சில எதுவுமே செய்யாமல் சர்வதேச சூழ்நிலையின் உதவியால் சுதந்திரம் பெற்றவை. உதாரணமாக இலங்கை, எவ்வித போராட்டமுமின்றி இரத்தம் சிந்தாமல், போராடாமல் சுதந்திரம் பெற்றதை நாம் மறந்துவிடமுடியாது.

இந்த நிலையில் நாம் எவ்வாறு, எந்தவழியில் போராடலாம் என்று கேள்வியெழுகிறபோது — என்னைப் பொறுத்தவரை அஹிம்சை வழியே சிறந்தது என்று கூறுவேன் ஏனெனில் பலாத்காரப் போராட்டத்தில் தோல்விக்கு இடமுண்டு; உலகில் பலாத்காரப் போராட்டங்கள் பலதோற்றிருக்கின்றன. ஆனால் அஹிம்சைப்போராட்டத்தை என்றும் எவராலும் தோற்கடிக்கவே முடியாது. அஹிம்சைவாதியை சரணாகதியடையச் செய்யவும் யாராலும் முடியாது.’’

—இவ்வாறு திரு. கதிரவேற்பிள்ளை கூறினார்.

### சிங்களப் படையெடு

—6-ம் பக்கத் தொடர்

பிள்ளையார் முற்றுகையிடப்படும் நிகழ்ச்சியினால் விளக்கினார். அத்துடன் கிளிநொச்சியின் நயினாநாகம்மாளுக்கு கொடுக்கப்பட்ட அதேயளவு காணியை நாக விகாரைக்குக் கொடுக்க அரசு திட்டமிட்டுள்ள சதிச் செயலை விளக்கினார்.

இறுதியில் யாழ்ப்பாணக் குடாநாடும் சிங்களக் குடியேற்றத்தினால் பறிபோகிறதென்பதை காங்கேசன்துறையில் உருவாகிவரும் புத்தகோயில்கள், யாழ்ப்பாணப் புகைவண்டி நிலையத்திற்கு முன்பு புத்தயாத்திரிகளுக்கு கட்டப்படும் தங்குமிடம், தமிழர் மீது வீசப்பட்ட வலையாக விளங்கும் யாழ்ப்பாண வளாகம், கொழும்புத்துறையில் உருவாகிவரும் அமரசேகரபுர யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா என்றபெயரில் நாளும் பொழுதும் பெருகிவரும் சிங்களப்படையெடுப்பினால் ஏற்படும் பெரும் பேர் இன்னலை மிக உன்னிப்பாக விளக்கினார்.

இறுதியில் காலம் தாழ்த்தாது எந்த விலை கொடுத்தும் தமிழ் ஈழத்தைதோற்றுவிப்பதினால் மட்டுமே தமிழ் இனம் ஈழத்தில் தப்பிப் பிழைக்கமுடியும் என்று கூறினார். எம் வழித்தோன்றல்களின் வசைமாற்கு யாம் ஆளாகாது இருக்க வேண்டுமாயின் இம்மாபெரும் பொறுப்பில் இருந்து நாம் தப்பி ஓடமுடியாது என்று ஈழவேந்தன் கூறி முடித்தார்.

### அனுதாபம்!

சுதந்திரன் அலுவலகத்தில் பணியாற்றும் வி. எம். குமார் அவர்களது தந்தையார் திரு. வெற்றிவேலு அவர்கள் அரியாலையில் காலமானார். அன்னாரது இறுதிச் சடங்குகள் 9-1-76 வெள்ளிக்கிழமை நடைபெற்றன. திரு குமாருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் சுதந்திரன் ஆசிரியரும் ஏனைய ஊழியர்களும் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

### தமிழ்ஈழத்தில் முஸ்..

—1-ம் பக்கத் தொடர்

வாழும் மற்றத் தமிழர்களோடு தமிழ் முஸ்லிம்களுக்கு உரிமைகள் நசுக்கப்படும். முன்னாள் சபாநாயகர் ஜனாப் இஸ்மெயில் பாராளுமன்றத்தில் சிங்கள நாட்டில் முஸ்லிம்கள் படும் கஷ்டத்தைப் பற்றி சொன்னது உங்களுக்குத் தெரியும். ஆனால் தமிழ் ஈழத்தில் முஸ்லிம்கள் சகல சம உரிமைகளும் உடையவராகவும் அதிக அரசியல் பலமுடையவர்களாகவும் இருப்பார்கள் முழு இலங்கையிலும் பதினாலு பேருக்கு ஒரு முஸ்லிம் இருக்கிறார். தமிழ்ஈழத்தில் மூன்று அல்லது நாலு பேருக்கு ஒரு முஸ்லிம் இருப்பார். தமிழ் ஈழத்தில் முஸ்லிம்கள் மற்றத் தமிழர்களோடு சேர்ந்து அடையக்கூடிய சுதந்திரம் வாழ்வு, சம உரிமை, முதலியவற்றை மற்ற முஸ்லிம் மக்களுக்கு எங்களோடு சேர்ந்து விளங்குவது உங்களைப் போன்ற [illegible]

### தேனாடு மாமன்றம் கொண்டாடும் தமிழர் திருநாள்

மட்டக்களப்பு தேனாடு மாமன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ‘தமிழர் திருநாள்’ நிகழ்ச்சி 11-1-76 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் மட்டக்களப்பு மாநகரமண்டபத்தில் இடம் பெறவிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் போது உயிர் நீசதவர்களின் ஞாபகார்த்தமாக அமைக்கப் பெறும் ‘‘தியாகிகள் அரங்கில்’’ தமிழர் திருநாள் கொண்டாடப்படும் பொங்கலை யொட்டியே இந்நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்படுகின்றது.

கவியரங்கம், சொற்பொழிவு, இசை நிகழ்ச்சிகள் என்னபனவற்றோடு கலைநிகழ்ச்சிகளும் சிறப்பம்சமாக இடம்பெறும் ‘‘தமிழினம் பொங்கிட...’’ என்ற தலைப்பில் இடம்பெறும் கவியரங்கில் இளம் கவிஞர்கள் பலர் கலந்துகொள்வார்கள்.

தீபாவளித் திருநாளை முன்னிட்டு நடாத்திய முத்தமிழ் விழாவின் போது ‘‘வீடு யாருக்கு?’’ என்ற நாடகத்தை மேடையேற்றி அனேகரின் பாராட்டுதல்களைப் பெற்றுக்கொண்ட தேனாடுமாமன்றத்தினர் ‘பொன் வேந்தனின்’ ‘வெற்றி நமதே’’ என்ற நாடகத்தை மேடையேற்றவுள்ளனர்.

---

புள்ள இளைஞர்களின் பெரும் பணியாகும.

இவ்வாறு கூறும் கொள்கை விளக்கக் கடிதம் ஒன்றை தமிழரசுக்கட்சியில் புதிதாக சேர்ந்துள்ள முஸ்லிம் இளைஞரான மன்னாரைச் சேர்ந்த கையூம் அவர்கட்கு சிந்தனைச் சிற்பி சி. கதிரவேலுப்பிள்ளை எழுதியுள்ளார்.

### தமிழர் கூட்டணி நடவடிக்கைகுழு!

தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக் கூட்டம் 11-1-76 ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டணியின் தலைமைச்செயலகத்தில் தந்தை செல்வா தலைமையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத ஐந்து பா உ.க்கள் அனுப்பியுள்ள விளக்கங்கள் நடவடிக்கைக்குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு அவர்கள் மீது என்ன நடவடிக்கை யெடுப்பதென்பது முடிவுசெய்யப்படும். பெப்ரவரி 4 — தமிழ் ஈழத் தீர்மான நாளன்று எடுக்கப் படவேண்டிய நடவடிக்கைகள் தனிநாட்டுப்பிரசாரம், தீண்டாமை யொழிப்பு இயக்கம், தொண்டர் பிரிவு, தொண்டர்பயிற்சி, ஆகியவற்றில் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் குழு ஆராயும்.

இதே வேளையில் போராட்டக்குழுவும் அன்று மாலை கூடிப் போராட்டத் திட்டங்களைப் பரிசீலிக்கும்!

### சுதந்திரன் நிறுத்தப்பட்டது ஏன்?

தமிழ் மக்கள் அதிகமாக வாழும் கொட்டாஞ்சேனை பகுதியில் உள்ள மாநகர சபை கிளை நூல் நிலையத்தில் தமிழ் மக்களின் வார ஏடான சுதந்திரன் பல காலமாகப்போடப்பட்டு வந்தது. ஆனால் சென்ற சில மாதங்களாக அது நிறுத்தப் பட்டுள்ளது. இது குறித்து அப்பகுதித் தமிழ் மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.


**நேர அட்டவணை**

மாணவ மாணவிகளே,

5 மில்க்வைற் நீல சோப் அல்லது 1 பார் சோப் அல்லது, 1 நீம் சோப் அல்லது 1 சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பி நேர அட்டவணை ஒன்றைக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தின் விடுதலைதான் எனக்குப் பொங்கல்

—"அக்கரை மாணிக்கம்"—

கவிகவியாய் எழுதுகிறீர் எந்தநாளும்
கண்டபலன் ஒன்றுமில்லை இந்தவாழ்வு
புவிமீது எத்தனைநாள் இன்னுமென்றே
புரியவில்லை நான்கூறும் வார்த்தையுங்கள்
செவிகளிலும் ஏறவில்லை என்னசெய்வேன்
சீக்கிரமே பொங்கல் வரப்போகுதென்றே
குவியாத மலர்முகத்தாள் என்மனைவி
கோபமுடன் என்முன்னே வந்துநின்றாள்.

சிலையாகி நான்நின்றேன் அவளின்வார்த்தை
சிந்தையிலே தைத்ததினால் எனைமறந்தேன்
கலையென்றும் கவியென்றும் வாழ்ந்துவிட்டேன்
காசுபணம் தேடவில்லை குழந்தைநாலு
மலைமீது மோதுண்ட கப்பல்போல
மனம்—சிதறி மங்கையவள் முகம்—நோக்கினேன்
உலைவைக்க அரிசியில்லை விறகுமில்லை
ஒன்றுமே வீட்டிலில்லை என்றாள்மீண்டும்

குலைகுலையாய் மரங்களிலே கனியிருந்தால்
கொதிக்கின்ற வயிறென்ன நிறைந்திடுமா
கலையென்று நீங்கள்தினம் அலைவதினால்
காய்பசிதான் தீர்ந்திடுமா கூறுமென்றே
அலையலையாய் அவளுரைத்த வார்த்தையெல்லாம்
அடிக்கடியென் மனத்திரையில் வந்துமோத
விலைக்காக நானெழுதவில்லையடி தமிழர்
விடுதலைக்காய் எழுதுகிறேன் எனவுரைத்தேன்

மான் விழியில் நீர்வழிய மனையாள் நின்றாள்
மலர்முகத்தை இருகரத்தில் ஏந்தியெந்தன்
கூன்பிறையே வருந்துவதில் பயனேயில்லை
குளிர்நிலவே கொஞ்சநாள் பொறுத்திருந்தால்
தேன்தமிழர் 'தனிநாடு' அமையுமங்கே
தெள்ளுதமிழ் ஆட்சிசெய்யும் உணர்ச்சி பொங்கும்
ஏன் என்று எவருமெமைக் கேட்கமாட்டார்
எல்லோரும் எல்லாமும் பெற்றுவாழ்வோம்

நாம் மட்டும் பசித்துயரால் வாடவில்லை
நாட்டினிலே பல தமிழர் மடிந்தே போனார்
தாம் வாழ்ந்த வாழ்வினையே எண்ணியெண்ணி
தமிழர் படுந் துயரமிங்கே கோடா கோடி
தேம் பொழியும் பொங்கலின்று பலபேர்க்கில்லை
தேயிலையால் ஈழமதை வாழவைத்தோர்
காம்பொடிந்த மலர்கள்போல் வாட்டங்கண்டு
"கால்நடையாய்' வாழ்கையிலே பொங்கலேது

குளிப்பதற்கும் கும்பிடவும் வழியேயின்றி
கொடுஞ்சிறையில் வாடுகிறார் தமிழ் இளைஞர்
பழிப்பதற்கு உரியசெயல் எதையுமிந்த
பண்புடைய எம்மக்கள் செய்தாரில்லை
வழிப்பறியர், வஞ்சமனக் கொலைகாரரும்
வாழுகின்ற இந்நாட்டில் 'தமிழர்களை
விழிப்படையச் செய்தலொரு குற்றமென்று
விலங்குகளாய் நடத்துகின்றார் பொங்கலேது,

பெற்றமகன் சிறை நடுவே பெற்றவளோ சிதையில்
பெரியமனம் படைத்தவர்கள் பொறுப்பாரோ இதனை
குற்றமென்ன தமிழர் செய்தார் ஆட்சியாளர்
கொடுமைக்கும் ஒரு எல்லை வேண்டாமா அங்கே
சிற்றெறும்பு புற்றெடுத்த இடங்களெல்லாம்
சீற்றரவம் சென்றுபுகும் செய்கைபோல
பற்றைவெட்டி காடழித்துத் தமிழர் வாழ்ந்த
பாங்கான நிலம்பறித்தார் பொங்கலேது

சொத்துரிமை மொழியுரிமை குடியுரிமைச்
சுதந்திரமே இழந்துவிட்ட எம்மையிங்கு
கொத்தடிமை ஆக்கிவிடச் சில தமிழர்
குறைமதியால் ஆடிவரும் நாடகத்தில்
பத்துயிர்கள் அழிந்ததுவும் யாழ் நகரில்
பல தமிழ்ப் பெண்கள் பட்டபாடும் இன்னும்
எத்தனை நாள் போனாலும் மறந்திடுமா
இத்துயரால் நலிந்த மக்கள் பொங்குவாரர

பருப்பில்லை சீனியில்லை அரசியில்லை
பைந்தமிழர் என்றாலே எதுவுமில்லை
விருப்போடு நாமெதையுஞ் செய்வதற்கு
விடுதலையும் இல்லையடி வெட்கக்கேடு
"அரச வங்கி விடுதலை நாள்" ஒன்று மட்டும்
அளித்திடுமா தமிழனுக்கு உரிமையாவும்
உருப்பட ஒரே வழி 'தனிநாடு'தான்
உரிமையுள்ள பொங்கலும் நமக்கங்கேதான்

புதுப்பானை புத்தரிசி இல்லையென்றே
புலம்பாதே மடப்பெண்ணே நாளை இவங்
கதிர்வரவின் அறிகுறியே வெள்ளி, எங்கள்
கவலைகளின் விடுதலைக்கே கண்ணீர் தமிழர்
எதிர்காலம் ஒளிபெறவே துயரமெல்லாம்
இனியெங்கள் வாழ்வினிலே இன்பம் பொங்கும்
புதுவாழ்வு மலர்ந்துவரும் தமிழீழத்தில்
பொங்கிடுவோம் உள்ளமெலாம் மகிழ்ச்சி பொங்க

இஞ்சிக்கும் மஞ்சளுக்கும் ஏங்குகின்றாய்
இனிக்கின்ற சாக்கரையும் இல்லையென்றாய்
வஞ்சிநீ தினமெந்தன் அருகே வந்து
வருத்தமுடன் கூறுகின்ற மொழிகள் கேட்டு
நெஞ்சமெல்லாம் பொங்குதடி துயரவெள்ளம்
நிலைமையென்றும் இப்படியே இருந்திடாது
கொஞ்சநாள் பொறுத்திரடி கண்ணே எங்கள்
கொடிபறக்கும் நாள் நெருங்கி வருகுதுபார்.

கீழ்வானில் கதிர்வரவு காணும்போது
கிட்டியது விடிவென்று கூவும் சேவல்
ஆழ்கடலும் ஆதவனின் வரவாலின்பம்
அடைந்தது போல் ஆர்ப்பரிக்கும் தரையில் மோதி
சூழ்க இன்பம் உலகமெலாம் என்றுகூறிச்
சுதந்திரமாய்ப் பாட்டிசைக்கும் பறவைக்கூட்டம்
வாழ்க தமிழ் வளர்க தமிழ் ஈழமென்றே
வாழ்த்துரைக்கும் திருநாளே எனக்குப் பொங்கல்

# "சிங்களப் படையெடுப்பின் ஆபத்தை உணர்ந்து அதை முறியடித்திட முழுமுச்சுடன் உழைப்பீர்!"

## கொழும்புத்துறையில் ஈழவேந்தன் பேச்சு!

சென்ற 31—12—75ல் மாலை 5½ மணிவரையில் கொழும்புத்துறை கிழக்கிலுள்ள திரு. தம்பு கந்தையா இல்லத்தில் திரு. க. தியாகுவின் தலைமையில் தமிழர் கூட்டணியின் கொழும்புத்துறைக்கிளையின் ஒரு பெரும் கருத்தரங்கு நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் திரு. நடராசா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்.

இக்கருத்தரங்கில் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை ஈழவேந்தன், திரு. வெ. யோகேசுவரன், ஆலாலசுந்தரம், திரு. எஸ். கே. மகேந்திரன், சட்டத்தரணி திரு. விசுவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கில் முதல் பேச்சாளராகக் கலந்து கொண்ட ஈழவேந்தன் அவர்கள் தமிழ் ஈழக்கோரிக்கை என்பது எமது முடிந்த முடிவு என்று கூறிய அவர் இதில் எவ்வித மாற்றமும் இனிச் செய்வதில்லை என்று கூறினர்.

அவர் மேலும் கூறுகையில் தமிழ் ஈழக் கோரிக்கையை நாம் பாகிஸ்தான் போன்றோ வங்காள தேசம் போன்றோ பிரிவினை அடிப்படையில் கேட்கவில்லை; மாறாக வரலாற்று அடிப்படையிலேயே எமக்கு இருந்ததை, இழந்ததை மீண்டும் நிலைநாட்டும் முறையிலேயே (Restoration of our lost rights) கேட்கிறோம் என்பதை 1618 வரை தமிழ் மன்னன் சங்கிலியன் ஆண்டான் என்ற வரலாற்றுக் குறிப்பை கூறிய அவர் 1797ல் வெளிவந்த கிலகோனின் அறிக்கையின்படி இலங்கை இரண்டு பிரிவுகளாக- அதாவது தமிழ்ப்பிரிவாகவும்—சிங்களப் பிரிவாகவும் ஆளப்பட்டுவந்ததையும் குறிப்பிட்டார். அது மட்டுமல்ல 1803ம் ஆண்டில அறிஞர்அரோசிமித்தின் உத்தியோகப்பூர்வமான தேசியப்படத்தின்படி சிலாபம் வரை அதாவது வடமேற்கு வரை தமிழன் கட்டி ஆண்ட பூமியாகவே ஈழம் விளங்கியதென்று கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில் ஆளும் இனத்திற்கு அடிவருடிகளாய் விளங்கும் சில கலாநிதிகள்—கல்லாநிதிகள் கூறுவதுபோல் தமிழர் இந்நாட்டிற்கு வந்தேறு குடிகளும் அல்லர் — கள்ளத் தோணிகளும் அல்லர். வணக்கத்திற்குரிய தந்தை ஞானப்பிரகாச அடிகளின் கூற்றின்படியும் சேர் போல் பீரிஸ் போன்றநடுநிலைநின்று வரலாறு படைத்த வரலாற்று ஆசிரியர்களின் கூற்றின் படியும் தமிழர் இந்நாட்டின் மூத்த குடிகள் என்று சான்றுகொண்டு நிலைநாட்டினர்.


சிங்களவரின்பெருமையை வெறி உணர்வோடு கூற எழுந்த மகாவம்சமே 32 தமிழ் மன்னர்களை தோற்கடித்தே துட்டகைமுனு ஆட்சியைக் கைப்பற்றினன் என்று கூறுகிறது. துட்டகைமுனு 32 தமிழ் மன்னர்களை [illegible] இல்லையோ என்பது அல்ல இன்று இங்குள்ள கேள்வி ஆனல் அவன் காலத்தில் 32 தமிழ் மன்னர்கள் இந்நாட்டை ஆண்டார்கள் என்பது தான் நாம் நினைவில் வைக்கவேண்டிய மாபெரும் உண்மையாகும்.

அவர் தன் உரையில் மேலும் கூறுகையில் வெறிநாயின் பேச்சில் சிங்கள அரசு தமிழ் இனத்தின் கொடியுரிமை வாக்குரிமை, நிலவுரிமை, மொழியுரிமை, மதஉரிமை, தொழில் உரிமை, படிப்புரிமை ஆகியவற்றை திட்டமிட்டுப்பறித்துவந்த வெறிப்போக்கினை கோவைப்படுத்திக் கூறினர். இந்த நிலை தொடரின் தமிழன் மூளைசாலியாக இருப்பதும் குற்றம், ஏன் மூச்சு விடுவதும் குற்றம் என்ற நிலை ஏற்படும் என்று நகைச்சுவையோடு குறிப்பிட்டார்.

அவர் தன் உரையில் மேலும் இன்று தமிழ் இனத்திற்கு ஏற்பட்டுள்ள அரசியல் நோய்க்கு சேர். பொன். இராமநாதன் சேர். பொன். அருணசலம் ஆகியோரின் காலத்திலேயே வித்திடப்பட்ட தென்பதை சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணசலம் ஆகியோர் அன்று மொழிந்த கூற்றுக்களை மேற்கோள் காட்டி நிறுவினர்.

அவர் மேலும் கூறுகையில் டொனமோர் எனின் இனி மேல் தமிழர் இல்லை என்று இராமநாதன் இடித்துரைத்த சட்டம் சரி தமிழ் இனத்தின் ஆன்மாவை அழிக்க வந்த (Soul ஆன்மா bury அழிக்க) வந்த சோல்பெறிச் சட்டம் சரி தமிழ் இனத்தைக் கொல்லும் கொல்வின் சட்டம் சரி—தமிழ் இனத்தை பூண்டோடு அழிக்க உருவாக்கப்பட்ட சட்டங்கள்தான் என்பதை மேற்குறித்த சட்டங்களின் உள்ளடக்கங்களைக்கொண்டு விரிவாக விளக்கினர்.

அவர் தன் பேச்சின் இறுதியில் மொழியின் அழிவொன்றே இனத்தை அழிக்கப் போதுமாய் அமையும் என்பதை 1827ல் வெளிவந்த இலங்கை குடித்தொகைக் கணக்கின்படி இலங்கையின் மொத்த மக்கட் தொகையில் 22 சதவிதமாய் விளங்கிய இலங்கைத் தமிழர் (மலையகத் தமிழர் நீங்கலாக) இன்று 1971ன் குடிக் கணக்கின்படி 12 சத வீதத்திற்கு வீழ்ச்சியுற்ற தன்மை தமிழர் தம் மொழியை விடுத்து சிங்களத்தை ஏற்று சிங்களவர்களாய் மாறிய துயர்தோய்ந்த வரலாற்றையே புட்டுக்காட்டுகிறது என்று கூறியபோது அவையோர் பெரும் வியப்பில் ஆழ்ந்தனர்.



### ஈழவேந்தனுக்கு பாராட்டு விழா!

கடந்த கால்நூற்றாண்டுகாலமாக சைவத்துக்கும் தமிழுக்கும் ஈழவேந்தன் ஆற்றிவரும் பணியைப் பாராட்டி அவரதுசொந்தஊரான கொழும்புத்துறை மக்கள் எதிர்வரும் பொங்கல் திருநாளான 15 1.76 அன்று அவருக்கு பாராட்டு விழா ஒன்றை நடத்துகின்றனர். சிறீலசிறீ சுவாமிநாதத் தம்பிரான் அவர்கள் ஆசியுரை வழங்க, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா. அப்பாக்குட்டி வண பிதா செல்வரத்தினம், ஆகியோருட்பட பலர் பாராட்டுரை வழங்கும் இவ்விழாவுக்கு சி. விஸ்வலிங்கம் அவர்கள்தலைமை தாங்குகிறார் விழா கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறுகிறது. இசை நிகழ்ச்சிகள், இன்னிசை விருந்துகளும் இடம் பெறுகின்றன.

ஈழவேந்தன் அவர்கள், மொழியின் அழிவே இத்தகைய அழிவை எம இனத்திற்கு ஏற்படுத்த முடியுமெனின் நம தாயகமும—நம பரம்பரைபபிரதேசமும பறிபோன பின் எமக்கு இநநாட்டில் வாழ்வு உண்டா என்று கேட்ட அவர், அம்பாறை அபகரிக்கப்பட்டு, பைந்தமிழ்ப் பெயர்தாங்கிய பட்டிபளை ஆறு கல்லோயாவாக மாறிய கதையையும், மூதூர் முற்றுகையிடப்பட்டு தமிழர் மூன்றும் இடததிற்கு தள்ளப்பட்டுள்ள முடிவில்லாத் துயர்தரும் கதையையும் கூறிய அவர் கோணமாமலையில தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை இரத்தக்கண்ணீரை வருவிக்கும முறையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் முத்து விளையும் மன்னாரில் கேடினை நீக்கும கேதீசுவரனுக்கும் கேடுகள் சூழ்ந்துள்ளதை உள்ளம் உருக்கக் கூறிய அவர் மடுமாதாவிற்கு ஏற்பட்டுவரும் மாபெரும் தீங்குகளையும் நுணுக்கமாக விளக்கிய அவர், இந்நிலை தொடரின் மன்னாரில் விளையும் முத்தை எம் முத்தம்மா அணியமாட்டாள் மாறாக முத்து மெனிக்காதான் அணிய மன்னாரும் பறிபோகும் என்றுஎச்சரித்தார்.

வயல் செறிந்து வாழவளிக்கும் வவுனியாவைப் பற்றிஅவர் குறிப்பிடுகையில் வடக்கின் எல்லையிலும் தமிழனுக்குத் தொல்லை என்பதை புள்ளி விபரங்களோடு விளக்கிறார். நம் நிலம் பறிபோகும் பரிதாபக் காட்சியை மேலும் விளக்கிய ஈழவேந்தன் அவர்கள் எப பிணிகள் தீர்க்கும்பிள்ளையாருக்கும் பெரும் ஆபத்து என்பதை முறிகண்டிப்

—5ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழத்தில் புதிய சிங்கள நீதிமன்றங்களை குடைந்தெடுப்பதற்கு நீதியமைச்சருக்கு அதிகாரமில்லை!

சட்டத்தரணி செ. வே. விவேகானந்தன்

அரசியலமைப்பின் '11ம் பிரிவு உட்பிரிவு (1) றின்படி

"நீதியை நிருவகிப்பதற்கு சட்டத்தினல் தத்துவமளிக்கப்பட்டுள்ள நீதிமன்றங்கள் நியாயசபைகள் என்பனவற்றினதும், கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தன் கீழ்த்தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள், நியாய சபைகள், என்பனவற்றினதும், 1958ம் ஆண்டின் 10ம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் கீழ்த்தாபிக்கப்பட்ட இணக்கச் சபைகளினதும் மொழி இலங்கை எங்கணும் சிங்களமாதல் வேண்டும். அதற்கிணங்க வழக்குரைகள், நடவடிக்கைகள், தீர்ப்புக்கள், கட்டளைகள் என்பனவும். நீதிமுறைச் செயலகள் சட்ட நிருவகச் செயல்கள் பற்றிய பதிவேடுகளு முட்படவுள்ள அவற்றின் பதிவேடுகள் சிஙகளத்திலிருத்தல் வேண்டும்."

"எனினும், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் முதனிலை நியாயாதிக்கத்தைப பிரயோகிக்கும் நிறுவனங்களின் விடயத்திலும, கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள், நியாயசபைகள் வேறு நிறுவனங்கள் என்பவற்றின் விடயத்திலும், 1958 ஆம் 10ஆம் இலக்க இணக்கச் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இணக்கச் சபைகள் விடயத்திலும், தேசிய அரசுப் பேரவை அதனது சட்டத்தினல அல்லது சட்டத்தின் கீழ் வேறு வகையில் ஏற்பாடு செய்யலாம்."

(1) The language of the courts and tribunals empowered by law to administer justice and of courts, tribunals and other institutions established under the Industrial Disputes Act and of Conciliation Boards established under the Conciliation Boards Act No. 10 of 1958, **shall be Sinhala throughout Sri Lanka** and accordingly their records, including pleadings, proceedings. judgements, orders and records of all judicial and ministerial acts, shall be in Sinhala.

Provided that **the National State Assembly may, by or under its law, provide otherwise** in the case of institutions exeing original jurisdiction in the Northern and Eastern Provinces and also of courts, tribunals and also of courts, tribunals and other institutions established under the Industrial Disputes Act and of conciliation Boards established under the Conciliation Boards Act No.10 of 1958, in the Northern and Eastern Provinces.

(3) In the Northern and Eastern Provinces and in Proceeddings before Quazis under the Muslim Marriage and Divorce Act, parties, applicants and persons legally entitled to represent such parties or applicants before any court, tribunal or other institution referred to in sub section (1) or subsection (2) of this section may—

(a) submit their pleadings, applications, motions and petitions in Tamil; and.

(b) participate in the proceedings in Tamil.

## நாடு முழுவதையும் சிங்களமயமாக்குவதே ஆட்சியாளர் போட்டிருக்கும் சதித்திட்டம்!

## தேசிய அரசுப் பேரவையின் தயவிலேயே தமிழன் வாழவேண்டியதுதாஞ?

உட்பிரிவின் இரண்டின் படி எதிர்காலச் சட்டங்கள் உட்பிரிவு (1) ற்கு அமைய இயற்றப்படவேண்டும்.

இப்பிரிவின் உட்பிரிவு மூன்றின்படி. "வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் முஸ்லிம் திருமண, மணநீக்க சட்டத்தின்கீழ் காதிமார் முன்பு வரும் நடவடிக்கைகளிலும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அல்லது (2) ஆம் உட்பிரிவில குறிப்பிடப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது நியாய சபையின் அல்லது வேறு நிறுவனத்தின் முனனருள்ள கட்சிக்காரர்கள விண்ணப்பகாரர்கள் என்போரும் அத்தகைய கட்சிக்காரர்களை அல்லது விண்ணப்பகாரர்களைப் பிரதிநிதித்துவம் வகிக்கச் சட்டப்படி உரிமைகொண்ட ஆட்களும்,

(அ) அவர்களது வழக்குரைகள், விண்ணப்பங்கள் பிரேரணைகள், மனுக்கள் என்பனவற்றைத் தமிழில் சமர்ப்பிக்கலாம்;அத்துடன்,

(ஆ) அந்நடவடிக்கைகளில் தமிழில் பங்குகொள்ளலாம்.

தமிழில் நடக்கும் வழக்குகளின் சிங்கள மொழி பெயர்ப்புக்கள் வைக்கப்படவேண்டும்.

சிங்கள மகன் ஒருவன் இலங்கை எங்கணும் வழக்குரைகளை, விண்ணப்பங்களை, பிரேரணைகளை மனுக்கள் சிங்களத்தில் சமர்ப்பிப்பதோடு அந்நடவடிக்கைகளில் சிங்களத்திலும் பங்கு கொள்ளலாம். அரசியலமைப்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்த உரிமை நீதிமன்ற விசேட மொழிச் சட்டம் 3-வது பிரிவு உட்பிரிவு (ஆ) படியும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சிங்கள மகனின் உரிமைகள் எந்தச் சட்டங்களின்கீழும் இலங்கை எங்கணும் அறுதியிட்டு உறுதியளிக்கப்பட்ட உரிமைகளாகத் திகழும் பொழுது, வவுனியா திருகோணமலை அபாறை மாவட்டங்களை ஏன் "குடைந்து எடுத்து" சிங்களத்தைப் புகுத்துவான்?சிங்கள சாம்பிராஜ்யத்தின் எண்ணந்தான் என்ன? நீதி அமைச்சரிடம் "குடைந்தெடுக்கும்" உரிமையை யார் கொடுத்தார்? அப்படிக் குடைந்தெடுக்கும் உரிமையோ அதிகாரமோ இல்லாதவொன்றில், நீதி அமைச்சர் செயல்பட முனைவது ஏன்? தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடுகின்றதா?

தமிழர்களின் உரிமைகளை குடைந்து எடுக்க முயலுகின்றனரா அன்றி கடைந்தெடுக்க முயற்சிக்கின்றனரா? அவர்களது உள்நோக்கம் கால கதியில் இலங்கை எங்கணும் சிங்களவனே வாழ வேண்டும், தமிழர்களின் உரிமைகளைப் படிப்படியாகப் பறிக்கவேண்டும் என்பதே. ஒரே இனம் ஒரே மொழி எனும் தத்துவத்தை பூரணத்துவமாக மாற்ற முயற்சிக்கின்றனர்.

இப்படிக் "குடைந்தெடுக்கும" அதிகாரம் அரசியலமைப்பினலோ, அன்றி நீதிமன்ற விசேட மொழிச் சட்டத்தினலே நீதி அமைச்சரிடம் கொடுக்கப்படவேயில்லை.

அரசியலமைப்பின்படியும் நீதிமன்ற மொழிச் சட்டத்தின் படியும் நீதிமன்ற விசேட மொழிச்சட்டத்தின் படியும் நீதி அமைச்சர் தனது நிருவாகக் கட்டளைகளின் மூலம் இலங்கை எங்கணும் சிங்களத்தையும், வடக்கு கிழக்கு மாகாணங்களின் சட்டத்திட்டங்களுக்கமைய தமிழையும் நீதிமன்ற மொழியாக செயல்படுவதற்கான சகல நடவடிக்கைகளை எடுக்கமுடியுமேயொழிய, வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒரு குறிப்பிட்ட இடங்களைப் பிரித்து அவ்விடங்களுக்குச் சிங்களத்தை நீதிமன்ற மொழியாக்க அதிகாரம் கிஞ்சித்தேனும் கிடையாது. அப்படி மாற்றங்கள் உண்டாக்க வேண்டுமாயின் நாடாளுமன்றந்தான் அதனைச்செய்ய முடியுமேயொழிய அமைச்சரினல் செய்ய முடியாது. 11 ஆம் பிரிவு உட்பிரிவு (1) நின்றபடி தேசிய அரசுப் பேரவை அதனது சட்டத்தினல் அல்லது சட்டத்தின் கீழ் வேறுவகையில் ஏற்பாடு செய்யலாம்."

ஆகவே, தமிழனின் நீதிமன்ற மொழியுரிமையைப் பொறுத்தமட்டில் தேசிய அரசுப்பேரவையின் காருண்ணியத்தில், தயவில் தங்க வேண்டியிருக்கின்றது. தமிழன் உரிமை திரிசங்கு சொர்க்கம்தான். நாடாளுமன்றம் தமிழனுக்குக் கொடுத்த சிறிதளவு உரிமையைத்தானும் நினைத்த நேரத்தில் தட்டிப்பறிக்க முடியும். அரசியலமைப்பே அப்படியென்றல், நீதி அமைச்சரின் நடவடிக்கை ஒருபடி மேலோங்கி நிற்கின்றது. —வளரும்.

---

## கவிஞர் நீலாவண...

—2-ம் பக்கத் தொடர்

"எடேய், எட்டப்பா. விடடா என் தம்பியை! கொடடா மூவர்ணக் கொடியை." என்று கர்ச்சித்தவாறு கொடியையும் சைக்கிளையும் எதிர்யிடமிருந்து பறித்துத்தந்தார், சின்னத்துரை ஆசிரியர்.

அப்போது, சேனைக் குடியிருப்புச் சந்தியில் பலரும் கூடி விட்டனர். மாலை ஐந்து மணி இருக்கும். அந்தப் பகுதியில் இராசமாணிக்கம் ஐயாவின் தேர்தல் கூட்டம் நடைபெற்றது. அங்கே நான் கும்மி பாடப்போகும் நேரத்தினில் அந்தத்தமிழ்த் துரோகியிடமிருந்து சின்னத்துரை ஆசிரியர் என்னையும் (சைக்கில் கொடியையும்) காப்பாற்றிஞர்.

"...ஓ...கவிஞர், நீலாவணனின் தம்பியா, இவன். சோனித் தம்பிப் பொடியன் என்டெல்லோ அடிச்சிற்றன். இவன் மருதமுனைச் சோனிப் பொடியனல்லோ...?"

"எடேய். நீ ஒரு தமிழனுடா? ஏன்டா, நீ மப்படிச்சுக்கு நின்ருடா, இவனைப் பிடிச்சு அடித்தாய்? அதென்னடா நீ சோனிகீனி என்று பிரிவினை பேசுகிருய்? இவன் கிடக்கிறுன் எச்சிலிலை பொறுக்கி நக்கி, சிங்களக் கட்சியளிடம் தமிழரை விற்றுப் பிழைக்கும்கீழ்சாதித்தமிழ்த் துரோகி. நீங்கவாங்கோ தம்பி லத்தீப்." என்று சீறிச்சினந்து, என்னை அந்தத் தமிழ்த்துரோகியிடமிருந்து காப்பாற்றியவாறு தேர்தற் கூட்டத்துக்குச் சென்று கொண்டிருந்தார், சின்னத்துரை ஆசிரியர்.

'ஓ... இவர்தாஞ, சுதந்திரன் வாரமலரிலே எழுதிவாற நீலாவணன், சின்னத்துரை?' என மனதுள் நினைத்துப் பூரிப்படைந்தவாறு அவரைப்பின் தொடர்ந்து கொண்டிருந்தேன்.

அன்று அந்தத் தேர்தல் கூட்டத்தில் என்னைக் கும்மி பாடுமாறு தலைவர், இராசலிங்கம் சேர்மன் கேட்டார்.

எங்களின் சின்னமது,
ஏழைகள் வீடிதுவாம்,
உங்களின் வாக்குகளை
வீட்டுக்குப்போட்டிடுவர்.
கொட்டும் மழையினிலே
எங்களின் வீடுகளெல்லாம்
கெட்டதாய் மாறிடாமல்
கட்டுக்கோப்புடனே
கெட்டரம் வீட்டைவிட்டு
வந்து வாக்களிப்போம்!

என்று பாடி முடித்து வெளியேறி வந்தவுடன், 'விடுவிடு'வெனச் சின்னத்துரை ஆசிரியர் என்னிடம் ஓடோடி வந்தார்.

"தம்பி கவின், பெர்று! இதை ஏன் ஒருக்கால் என்னிடம் காட்டவில்லை. கெட்ட நம் வீடு என்பது பிழை. இது தம்பி, நமது தோதல் வெல்லப்பாடிய கும்மியில் 'கெட்ட' கெட்ட, என்று கவி வரக்கூடாது. வடட, சொட்ட, இடட மான, என்று அழகு தமிழில் இருக்க வேண்டும.' என அன்று உடனே திருத்தித் தந்தார்.' ஆ... இவரல்லவோ, கவிஞர் நீலாவணனிடம் மாட்டிக் கொண்டார்?' என்று சிலர் என்னைப் பார்த்துப் பரிதாபப்பட்டனர். ஆஞல், நாஞே, எனது (புரட்சிக் கவிதையை) இளம் காலத்திலிருந்து ஒரு படி உயர்ந்தது, அமரகவி நீலாவணன், அண்ணஞல் தான், என இன்றும் எண்ணும் போது, ஆனந்தக் கண்ணீரால் அமர கவிக்கு அஞ்சலி செய்து கொண்டிருக்கிறேன்.

இன்று எங்களிடையே எத்தனையோ எழுத்தாளர், சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு நிலபாவாடை விரித்து, பதவிக்காய்த் தமிழ் பேசும் மக்களைக் காட்டிக் கொடுத்து, பதவி உயர்ந்தும் துரோகத் தமிழர்களாய் வாழுகின்றனர். அமரர் நீலாவணன், தமிழே தமிழ் பேசும் மக்களே, என்று சாகும்போதும் 'தமிழே' எனக்கூவி இலட்சியப் புருஷார்த்தமாகவாழ்ந்த அமரராளுர் வாழ்க அவர் புகழ்.

---

### சுதந்திரன் புதிய சந்தா விபரம்

1976ம் ஆண்டு சனவரியிலிருந்து சுதந்திரன் புதிய சந்தா (உள்ளூர்) விபரம் வருமாறு:-

- ஓர் ஆண்டுக்கு— (புதன், ஞாயிறு இதழ்களுக்கு) ரூபா 50-00
- அரையாண்டுக்கு— ரூபா 25-00

சந்தாப்பணத்தை காசோலையாகவோ காசுக் கட்டளையாகவோ (நேரடியாக ரொக்கமாகவோ) செலுத்தலாம்.

பணம் அனுப்பவேண்டிய முகவரி:-

நிர்வாகி
சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக வீதி
கொழும்பு-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கல்வித்துறையின் எல்லாப்படிகளிலும் 'தரப்படுத்தல்' திணிக்கப்படுகிறது!



## சட்ட மாணவர் மத்தியில் நாவலர் அமிர்தலிங்கம்!

"தமிழ் மாணவர்களுக்கான தரப்படுத்தல் முறை இன்று பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையில் மாத்திரமல்லாமல் சட்டக் கல்லூரியிலும் ஏனைய ஜி. சி. ஈ. சாதாரண தரங்களிலும் கூட இருந்து வருகிறது. விடைத்தாள்களுக்கு ஆசிரியர்கள் போட்டு அனுப்பும் புள்ளிகள் ஒருபுறம் இருக்கக் கல்வி அதிகாரிகள்தான் விகிதாசாரப்படி புள்ளிகளைத் தீர்மானிக்கிருர்கள். இப்படியான இக்கட்டான நிலையில் பல்கலைக்கழகம் புகமுடியாமல் அவஸ்தைப்படும் தமிழ் மாணவர்களுக்குப் புகலிடம் அளிப்பது போல் யாழ் சட்டக்கல்வி நிலையம் தமிழில் சட்டம் போதித்துவருவது பாராட்டுக்குரியது. ஒரு இனம் விடுதலை பெற்ற இனமாக வாழ வேண்டுமானுல் முதலில் அது தன் மத்தியிலே தனக்கென்று தேவையானவை அத்தனையையும்ஏற்படுததிக் கொள்ளவேண்டும். இந்த வகையில் யாழ் சட்டக்கல்வி நிலையம் பாராட்டப்பட வேண்டியதே."

இவ்வாறு தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் கடந்த 3-1-1976 யாழ்ப்பாணம்சுபாஸ் டூரிஸ்ட்ஹோட்டலில்நடை பெற்றமின்சாரணம்நிலைய வீதியில் உள்ள யாழ். சட்டக் கல்வி நிலைய மாணவர் மன்றத்தின் 2வது வருடாந்த இராப் போசன விருந்துபசார வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இவ்வைபவத்திற்கு மன்றத்தின் தலைவர் திரு. வி. தியாகராஜா தலைமை வகித்தார். திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இன்று நீங்கள் படிக்கும் சட்டங்கள் இரவோடிரவாக மாறலாம். சட்டப்புத்தகங்களைப் பாடமாக்குவதால் பிரயோசனமில்லை. ஆனால் அவற்றை எவ்வாறு நுணுக்கமாகஅணுகுவதுஎன்பதைத்தான்சட்ட மாணவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். விடுதலை பெறத்துடித்துக்கொண்டிருக்கும் எமது இனத்திற்குச் சட்டம் தெரிந்த சிந்தனையாளர்கள் அதிகம் தேவை."

யாழ் சட்டக்கல்வி நிலைய விரிவுரையாளர் திரு என். விஸ்வலிங்கம் பேசுகையில், "கேளிக்கைகளின் போது கூட நாம் தமிழினத்தின் விடுதலை பற்றியே சிந்திக்கின்ருேம். என்பதற்கு எடுத்துக்காட்டாக இவ்விருந்துபசார வைபவம் அமைந்துள்ளது. நாம் வெறும் இலாப நோக்கில் இச்சட்டக்கல்வி நிலையத்தை ஆரம்பிக்கவில்லை. தரப்படுத்தலினுல் பாதிக்கப்பட்ட தமிழ்மாணவர்களைப் பாதுகாப்பது எமது கடமை உலகிலேயே மிகவும் கடினமான உழைப்பாளிகள் வழக்கறிஞர்கள் தான். இன்று சட்டத்தொழிலின் வருவாய் சில தரங்களில் ஓரளவு குறைந்திருந்தாலும் மாணவர்கள் சட்டம்படிப்பதனுல் தீங்கொன்றும் இல்லை." என்ருர்.

இறுதி வகுப்பு மாணவர் சார்பில் திரு. எம். பொன்னுத்துரை பேசினுர். ஆரம்பத்தில் மன்றத்தின் பத்திராதிபர் திரு. நெல்லை க. பேரன் கவிதையில் வரவேற்புரை வழங்கியதுடன் மன்ற வெளியீடான 'ஒரு பட்டதாரி நெசவுக்குப்போகிருள்' என்ற தனது சிறுகதை நூலை திரு. அமிர்தலிங்கம் தம்பதிகளுக்கு அன்பளிப்புச்செய்தார்—

செல்வி. சி. கணபதிப்பிள்ளை நன்றியுரை கூறினுர்.

4-வது வெற்றி வாரம்!

கெப்பிட்டல் (கொழும்பு) லிடோ (யாழ்நகர்)

ஜெமினி கணேசன் - பத்மினி
கே. ஆர். விஜயா, ஜெயலலிதா நடித்த-

அன்னை வேளாங்கண்ணி (கலர்)

11-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) கடைசி வாரம்

முத்துராமன், கே. ஆர். விஜயா நடித்த-

தீர்க்க சுமங்கலி

13-ம் திகதி முதல்

ஜெமினி கணேசன், சௌகார் ஜானகி நடித்த-

ஸ்கூல் மாஸ்டர்

பிளாசா 3வது வாரம்!

ஜெமினி, பத்மினி, ஜெயலலிதா, ரங்கராவ் நடித்த-

ஆதிபராசக்தி

மகத்தான தைப்பொங்கல் வெளியீடு!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) சிவகுமாரன் லக்ஷ்மி — நடித்த —

கண்மணி ராஜா

3-வது வாரம் செல்லமகால்

கடவுள் அவதாரத்தில்தான் மனிதனுக்கு எத்தனை மகிழ்ச்சி! அவ் அவதாரங்களால் ஏற்படும் நன்மைகளையும், கடவுளின் சிறப்பையும் விளக்குகிறது!

O ஜெமினி O ஜெயலலிதா O முத்துராமன்
O ரங்கராவ் O பத்மினி O சுருளிராஜன்
O எஸ். வி. சுப்பையா O வாணிஸ்ரீ O ராஜஸ்ரீ
O சுந்தரராஜன் O ராகினி O நிர்மலா நடித்த

எல்லா மதத்தினரும் பார்க்கவேண்டிய படம்

ஆதிபராசக்தி

(ஈஸ்ட்மன் கலர்)

இசை ...... வசனம் — டைரக்ஷன்
கதை — கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

கெபிட்டல் பொங்கல் வெளியீடு

சிவகுமார், தேங்காய், செந்தாமரை, லட்சுமி,
எம். என். ராஜம், மனோரமா நடித்த-

கண்மணி ராஜா

றீகல் நுவரெலியா

2.30, 6, 9.30

சிவகுமார், ஜெயசித்திரா, சசிகுமார் நடித்த தேவரின்

வெள்ளிக்கிழமை விரதம் (கலர்)

றீகல் மட்டுநகர்

தினசரி 6, 9-30, சனி - ஞாயிறு 2-30, 6, 9-30
முத்துராமன்—கே. ஆர். விஜயா — ஜெயசித்திரா
சிவகுமார்—சுந்தரராஜன் —நடித்த

தீர்க்கசுமங்கலி

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு—12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976—ம் வருடம் ஜனவரி [illegible] அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org